Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**Internet Browsing @**
**Secote information Technologies**
(near the parameswara junction)
யாழ். நகரில்...
குறைந்த கட்டணத்தில் அனைத்து கணனிசார் வேலைகளையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்,
- அதிவேக PENTIUM 4 கணனி மூலம்
- இணை சேவை (Internet Browsing)
- இன்ரநெற் போன் நிமிடத்துக்கு 10/- (கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள்)
- Computer printing 1Page 10/-
- Cd Writing 50/- (Computer Type seting)
- Floppy disc, CD என்பன பெற்றுக்கொள்ளலாம்.
- Computer Type Setting

(354)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 20 (23.05.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 231



செய்தியாளர் மாநாட்டில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்.



திரண்டு வந்திருந்த உள்ளூர் மற்றும் தென்னிலங்கைச் செய்தியாளர்கள்.

# அரசியல் அமைப்புக்கு வெளியே நின்று இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தலாம்

## செய்தியாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க அரசு, அரசியலமைப்புக்கு வெளியே நின்று சிந்திக்க வேண்டும். நடைமுறைப்படுத்தலிலும், முடிவெடுத்தலிலும், முழு அதிகாரங்களைக் கொண்ட ஓர் கட்டமைப்பாக - இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அமைவதே பொருத்தமானதாகும் என, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுத் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் - சமாதானச் செயலணி அலுவலகத்தில், நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில், தமிழ்ச்செல்வன் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து விளக்கமளித்தார். அவர்

தொடர்பாக, அரசின் பதிலை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றோம்.

**மக்கள் எதிர்பார்ப்பதே எமது முடிவு**

உங்களிற்கு ஏற்கனவே தெரியும், கடந்த 14 மாதங்களாக ஆறு

முன்னெடுப்புக்கள் தொடர்பாக - மக்கள் பெரும் எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் இருந்ததை நீங்கள் அறிவீர்கள்.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் எதுவும் நிறைவேறாத சூழ்நிலையில்,

## புலிகள் இயக்கப் போராளி ஈ.பி.டி.பியினரால் படுகொலை

### மட்டு - காரைதீவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான பூவண்ணன் என்பவர் நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பு - காரைதீவில் ஈ.பி.டி.பியினரால் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை

காரைதீவில் வைத்து ஈ.பி.டி.பி. கும்பலினால் கடத்திச் செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான நிந்தவூரில் போடப்பட்டமையானது, தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தைத் தோற்றுவித்து, இரு சமூகங்களுக்கு

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் - சமாதானச் செயலணி அலுவலகத்தில், நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில், தமிழ்ச்செல்வன் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து விளக்கமளித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக, அரசின் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

**மக்கள் எதிர்பார்ப்பதே எமது முடிவு**

உங்களிற்கு ஏற்கனவே தெரியும், கடந்த 14 மாதங்களாக ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்று, தீர்மானங்கள் மக்களினைச் சென்றடையும்போதெல்லாம், இச்சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக - மக்கள் பெரும் எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் இருந்ததை நீங்கள் அறிவீர்கள்.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் எதுவும் நிறைவேறாத சூழ்நிலையில், அவர்கள் - நம்பிக்கையீனமும், விரக்தியுமடைந்த இந்தச் சந்தர்ப்பத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் இடைக்கால நிர்வாகம்; அரசு பரிசீலித்துப் பதில் அனுப்பும்!

## நமது ஈழநாட்டுக்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக, விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாக - அரசு ஆராய்ந்து விரைவில் அதற்குப் பதில் அனுப்பி வைக்க முயற்சித்துவருகிறது என, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்- இடைக்கால நிர்வாக கட்டமைப்புத் தொடர்பாக, நேற்று தமிழ்ச்செல்வன் வெளியிட்ட கருத்துகள் எமக்குக் கிடைத்துள்ளன. இது தொடர்பாக, நாம் ஆராய்ந்து எமது முடிவுகளை விரைவில் வெளியிடுவோம். விடுதலைப் புலிகளின் நிலை தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. அதேசமயம், இந்த விவகாரம் தொடர்பாக- நோர்வே வெளியுறவுப் பிரதி அமைச்சர் ஹெல்கிசனுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். புலிகளின் நிலையைப் பரிசீலித்து, ஒரு பதிலுக்கு நாம் முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம் என்றார்.

ரோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டோம் என, புலிகள் உறுதியாக இதுவரை அறிவிக்கவில்லை என்றும் அமைச்சர் பீரிஸ் அப்போது தெரிவித்தார். (200)

## பிரதமர் மந்திராலோசனை

வட - கிழக்கில் இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவது குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபருடன் மந்திராலோசனை நடத்திவருகிறார்.

வட - கிழக்குப் பகுதியில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக, அதிகாரங்களைக்கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று, அரசிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை முன்வைத்ததைத் தொடர்ந்தே - பிரதமர் (10 ஆம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான பூவண்ணன் என்பவர் நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பு - காரைதீவில் ஈ.பி.டி.பியினரால் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை, 'தமிழ் - முஸ்லிம் மக்களே விழிப்பாக இருங்கள்' என்ற தலைப்பில் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்தகால யுத்தத்தினால் சுய இலாபம் அடைந்த தமிழ் விரோதக் கும்பல்களின் அடாவடித்தனங்களில் ஒன்றாகவே, எமது இயக்கப் போராளியான பூவண்ணனின் (காத்தமுத்து கோணேஸ்வரன்) திட்டமிட்ட கொலைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

காரைதீவில் வைத்து ஈ.பி.டி.பி. கும்பலினால் கடத்திச் செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான நிந்தவூரில் போடப்பட்டமையானது, தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தைத் தோற்றுவித்து, இரு சமூகங்களுக்குமிடையில் இன மோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான தீய சக்திகளிடமிருந்து தமிழ் - முஸ்லிம் மக்களை விழிப்பாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளும் அதேவேளை,

மீண்டும் இவ்வாறான செயல்கள் தொடருமானால் - மிகவும் பாரதூரமான நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிர்வாகக் கட்டமைப்புக்கு அரசை வலியுறுத்துங்கள்

## அமெரிக்கத் தூதரிடம் கூட்டமைப்பு கோரிக்கை

வடக்கு - கிழக்கில் அதிகாரம் உள்ள நிர்வாகக் கட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்துமாறு, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸிடம் கோரியுள்ளனர்.

அமெரிக்கத் தூதுவரைக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான- நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில், அமெரிக்கத் தூதுவருக்கு தற்போதைய நிலைமை பற்றி விரிவாக விளக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -913)

# உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு.
## (வடக்கு–கிழக்கு மாகாண சபை)

# வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### 'ஆஅவ' கடன் இல. 1846 - SRI (SF)

## கேள்வி அறிவித்தல் 05

# கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி தாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இணங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கிளி/நிக்கொட்/ஈடி/01 | பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் 110'X25' இரு மாடிகளைக்கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம் | எம் 7 | 39000 |
| 02 | கிளி/நிக்கொட்/ஈடி/06 | பளை றோ.க.த.க பாடசாலையில் 110'X25' இருமாடிகளைக்கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/06 | பளை றோ.க.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 03 | கிளி/நிக்கொட்/ஈடி/07 | புன்னை நீராவி அ.த.க.பாடசாலையில் 110'X25' இரு மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/07 | புன்னைநீராவி அ.த.க பாடசாலையில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 04 | கிளி/நிக்கொட்/ஈடி/08 | கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 110'X25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/08 | கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த, 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 05 | கிளி/நிக்கொட்/ஈடி/09 | பளை மத்திய கல்லூரியில் இரண்டு 120'X25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 34000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/09 | பளை மத்திய கல்லூரியில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 06 | கிளி/நிக்கொட்/ஈடி/10 | கிளிநொச்சி/ புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலையில் 110'X25' இரு மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம் (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/10 | கிளிநொச்சி/ புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 07 | கிளி/நிக்கொட்/ஈடி/11 | பிரமன்தனாறு மகா வித்தியாலயத்தில் 110'X25' இரு மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/11 | பிரமன்தனாறு மகா வித்தியாலயத்தில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 08 | கிளி/நிக்கொட்/ஈடி/12 | பூநகரி மகா வித்தியாலயத்தில் 110'X25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/12 | பூநகரி மகா வித்தியாலயத்தில் செயற்பாட்டறையும், விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 09 | கிளி/நிக்கொட்/ஈடி/13 | பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் 110'X25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | கிளி/நிக்கொட்/ஈடி/13 | பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X25' கட்டட நிர்மாணம் (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 10 | கிளி/நிக்கொட்/ஏஜி/01 | பளை கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம் | எம் 7 | 35000 |
| 11 | கிளி/நிக்கொட்/ஏஜி/02 | உருத்திரபுரம் கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம் | எம் 7 | 21000 |
| 12 | கிளி/நிக்கொட்/ஏஜி/03 | முழங்காவில் கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம் | எம் 7 | 41000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.
   I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்வணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளரிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.
   இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.
   III. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   IV. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
04. மேற்படி பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.
05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
06. கேள்வி ஆவணங்களை 2003 மே 22 ஆந் திகதியிலிருந்து ஜூன் 5 ஆந் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.
07. கேள்வி கோருபவருக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் 11 குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.
08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர் கருத்திட்ட கேள்விச்சபை மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2003 ஜூன் மாதம் 12 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று ஜூன் 03 ஆந் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்குக் கச்சேரியில் நடைபெறும்.
10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**தி.இராசநாயகம்**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி - 945)

# தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்கள் ஒன்றிணைந்துள்ளனர்!

## தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன்



யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய முகாமைத்துவப் பயிற்சிநெறியானது அவுஸ்திரேலிய வாழ் நிபுணர்கள் நேரடியாக வந்து, தாயகத்தில் பல திறமைசாலிகளை உருவாக்கக் கிடைத்த பெரும் வாய்ப்பாகும்.

இது அரசியலிலும் சரி, பொருளாதாரரீதியிலும் சரி - ஈழத்தமிழ் மக்கள் தாயகத்திலும் - புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்தாலும் ஒன்றுபட்ட சக்தியாகப் பின்னிப்பிணைந்து நிற்பதையே காட்டுகின்றது.

- இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன் - முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றும்போது தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய முகாமைத்துவப் பயிற்சிநெறியில் - தேர்ச்சி பெற்ற வள அணியினரைச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லை மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பேராதரவுடன் ஒருங்கமைக்கப்பெற்று, வெகுசிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியறதுறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை யுனிசெப் நிறுவன வன்னிப் பிரதிநிதி பெனி புறூன், கௌரி மகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்

முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் றீகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வரவேற்புரையைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவிப்பணிப்பாளர் எஸ்.இனியவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சிபெற்ற வள அணியினருக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. சான்றிதழ்களை யுனிசெப பிரதிநிதி பெனி புறூன், தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச இணைப்பாளர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த பொறியியலாளர் சண்குமார், திருமதி கௌரி மகேஸ்வரன், முல்லை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் முகுந்தன், செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி உட்பட முக்கிய பிரமுகர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

வள அணியினருக்கான நினைவுப் பரிசில்களை அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அ.பரராஜசிங்கம் வழங்கிக் கௌரவித்தார்.

சிறப்புரைகளைக் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, அவுஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் அ.பரராஜசிங்கம், யுனிசெப பிரதிநிதி திருமதி பெனி புறூன், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி ஆகியோர் நிகழ்த்தினர்.

40 நாள்களாக நடைபெற்ற முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சிநெறியில் பயின்று தேர்ச்சிபெற்று, முதல் மூன்று இடங்களைப் பெற்ற திருமதி சு.மாலினி, யோ.சதீஸ், கா.கணேசலிங்கம் ஆகியோருக்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளரால் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன் தனதுரையில் - மேலும்

வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 35 தலைமைத்துவ அலுவலர்கள் இப் பயிற்சிநெறிக்காக இணைக்கப்பட்டனர். இவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிநெறிக்கு அவுஸ்திரேலிய வாழ் ஈழத்தமிழ் நிபுணர்கள் நேரடியாகத் தாம் பெற்ற அறிவை பிறரும் பயன் பெறத்தக்க வகையில் வழங்கியிருந்தனர்.

இப்பயிற்சிநெறிக்கு அவுஸ்திரேலியாவிலுள்ள இன்னும் பல அறிஞர்களும், நிபுணர்களும் பேராதரவு நல்கியிருந்தமை - தாயகத்திலும் பல வள நிபுணர்களை உருவாக்கித் தம்மால் எமது தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இது அரசியலிலும்சரி, பொருளாதாரரீதியிலும்சரி - ஈழத்தமிழ் மக்கள் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்தாலும், பின்னிப்பிணைந்து பிரிக்கமுடியாத ஒரு சக்தியாக ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என்பதையே உலகிற்கு உணர்த்துகின்றது என்றார்.

யுனிசெப் பிரதிநிதி பெனி புறூன் தனதுரையில் -

எதிர்பார்த்ததைவிட மிகமிகத் திறமையாக இப்பயிற்சிநெறி நடாத்தப் பெற்றுள்ளது. இப்பயிற்சிநெறி தன்னம்பிக்கையை வளர்த்து, நல்ல அணுகுமுறையுடைய, ஆற்றல்மிக்க புதுமனிதர்களாக ஒவ்வொருவரையும் வளர்த்திருக்கின்றது. இத்திறமைசாலிகள் தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி திட்டங்களைச் சிறப்பாக முன்னெடுத்து நாட்டை வளப்படுத்த வேண்டும். திறம்பட நடத்திய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு எனது பாராட்டுக்கள் எனத் தெரிவித்தார்.

## குமுதினி படகு சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக - நெடுந்தீவுக்கும், குறிகட்டுவானுக்கும் இடையிலான 'குமுதினி' படகு சேவை இன்று இடம்பெறாது என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## சங்கீத சபை சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

வட-இலங்கை சங்கீதசபையின் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்த தேர்வு நாடிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், கலாவித்தகர் பட்டத்துக்கான ஆற்றுகை நிகழ்வைப் பூர்த்தி செய்தவர்களுக்குச் சான்றிதழுடன், காசோலையும் வழங்கப்படும் என வட - இலங்கை சங்கீத சபைத் தலைவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மக்கள் அரங்கு

(யாழ்ப்பாணம்)

"பாதுகாப்புக்கும் சமாதானத் திற்கும் கூட்டு நடவடிக்கைகள்" என்ற மக்கள் அரங்கு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிமுதல் 5 மணிவரை யாழ். பல்கலைக்கழகப் புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் - தென்னிலங்கையிலிருந்து முக்கிய அரசியல், பொருளாதார நிபுணர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



திருமலை - மூதூர் பிரதேச முஸ்லிம் பிரமுகர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டோரில், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம்.

# ஐ.தே.க. அமைச்சர்களின் மீது ஊழல் குற்றச்சாட்டு இல்லை!

## அமைச்சரவைக் கூட்டத்தில் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏறியதும் தற்போதைய அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது தடுக்கப்படும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்த கருத்துக் குறித்து அமைசசரவையில் காரசாரமாக வாதிக்கப் பட்டது.

நேற்று முன்தினம் நடந்த அமைசசரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பாக வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க எடுத்து விளக்கினார்.

அமைச்சரவைக் கூட்டமொன்றில் ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவையொன்றை உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கவில்லை.



- ஐக்கியதேசியக் கட்சி அமைச்சர்கள் ஊழல்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டே, அமைச்சர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவையை உருவாக்குவது குறித்து பிரஸ்தாபிக்கப் பட்டிருப்பதாக சரத் அமுனுகம விளக்கமளித்திருந்தார்.

ஆனால், உண்மையில் அப்படி நடக்கவில்லை என்றும், சரத் அமுனுகம அமைச்சரவைக் கூட்ட விபரங்களைத் திரித்து வெளியிடுவதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்கா குற்றஞ்சாட்டினார்.

# மண்சரிவில் புதையுண்ட பதினொரு சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

மாத்தளை பங்கொட பகுதியில் ஏற்பட்ட மண்சரிவின்போது, மண்ணில் புதையுண்டவர்களின் 11 சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

இந்த மண்சரிவின்போது, 21 பேர் மண்ணில் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. ஏனைய சடலங்களைத் தேடும் பணிகள் தொடர்வதாக அமைச்சர் லக்ஷ்மன் அபயவர்த்தனா தெரிவித்தார்.

மண்சரிவில் உயிரிழந்தவர்களுக்கான அவசர இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,

உயிரிழந்த ஒருவருக்கு அவசர இழப்பீடாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 'சார்ஸ்' நோயை கண்டுபிடிக்க நவீன தொழில்நுட்ப வசதி!

## 'ஜீன் ரெக்' நிறுவனம் அறிவிப்பு

'சார்ஸ்' நோய் தொற்றியுள்ளதா எனப் பரிசோதனை செய்யக்கூடிய நவீன மரபணுத் தொழில்நுட்ப வசதிகள் தம்மிடம் இருப்பதாக ஜீன் ரெக் (Gene tech) என்ற நிறுவனம் அறிவித்துள்ளது.

மரபணுத் தொழிநுட்பத்துடன் துரிதமாக ஆய்வுப்பரிசோதனையை மேற்கொள்ளக்கூடிய இந்த நவீன தொழில்நுட்ப முறைக்கு, உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது.

ஆறு மணித்தியாலத்துக்குள் 'சார்ஸ்' நோய் குறித்த பரிசோதனை அறிக்கையை இந்த நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜீன் ரெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

# மேலும் ஒரு நிறுவனம் காஸ் சந்தைப்படுத்தலில்!

இலங்கையில் மேலும் ஒரு நிறுவனம் சமையல் காஸ் விற்பனையில் இறங்கியுள்ளது. 'சிறிமல்' என்ற புதிய நிறுவனமே காஸ் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கை - மலேசிய நிறுவனங்கள் இணைந்தே இந்தக் காஸ் விற்பனைப் பணியில் ஈடுபடவுள்ளன. இந்த நிறுவனத்தின் காஸ் சிலிண்டா ஒன்றின் விலை 500 ரூபா எனவும், வெற்று சிலிண்டருக்கான பணம் அறவிடப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்துக்கான காஸ் ஏற்றிய முதலாவது கப்பல் இன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# முன்னாள் அமைச்சர் படுகொலை தொடர்பாக கருணாநிதியின் மகன் அழகிரி கைதானார்!

## தி.மு.க. குடும்பச் சண்டை உச்சக்கட்டத்தில்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதியின் மகனான மு.க.அழகிரி மதுரையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். முன்னாள் அமைச்சர் தா.கிருட்டினன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவே சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தி.மு.க.தலைவர் மு.கருணாநிதியின் மகன்களான மு.க.அழகிரி, மு.க.ஸ்ராலின் ஆகியோருக்கு இடையில் கடும் முறுகல் நிலவிவருகிறது.

இந்த நிலையில்தான் ஸ்ராலின் ஆதரவாளரான முன்னாள் தமிழக அமைச்சர் தா.கிருட்டினன் கடந்த செவ்வாய்க்கிழமை படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைக்கு மு.க. அழகிரி குழுவினரே காரணம் என்று படுகொலையான தா.கிருட்டினனின் குடும்ப உறவினர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்திருந்தனர். இதனையடுத்தே தமிழகப் பொலிஸார் மதுரையில் வைத்து மு.க. அழகிரியைக் கைது செய்தனர். இவருடன், இவரது நெருங்கிய ஆதரவாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவராமனும் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட மு.க.அழகிரி மற்றும் சிவராமன் ஆகியோரை நீதிமன்றத்தில் பொலிஸார் முன் நிறுத்தியபோது, இவருவரையும் 15 நாட்கள் காவலில் வைக்க நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி, திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்த ஜெயலலிதா அரசாங்கம் செய்யும் சதியே இந்தச் சம்பவங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வல்வெட்டித்துறை வைத்தியசாலை ஆய்வுகூடம் நவீனமயமாக்கப்படும்!

## 10 இலட்சம் ரூபா செலவிட முடிவு

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்குச் சுகாதார திணைக்களம், நிரந்தர ஆய்வுகூட நுட்பவியலாளர் நியமித்ததையடுத்து, இந்த வைத்தியசாலை ஆய்வுகூடம் 10 லட்சம் ரூபா செலவில் நவீனமயமாக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் உதவியுடன், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.மயிலேறும் பெருமாள் மேற்கொண்டுள்ளார்.

இதுவரைகாலமும், வைத்தியசாலைக்கு ஆய்வுகூட நுட்பவியலாளர், மந்திகை அரசினர் வைத்தியசாலையிலிருந்து வந்து, வாரத்தில் இரு நாட்கள் மாத்திரம் பணியாற்றி வந்தார். இந்த ஆய்வுகூட நுட்பவியலாளர் பற்றாக் குறையால் - நீரிழிவு நோயாளர்கள் மற்றும் மலேரியா நோயாளரகள் பெரும் பாதிப்புக்குள்ளாகிவந்தனர். நோயாளர்களின் கோரிக்கையடுத்து, கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒரு நிரந்தர ஆய்வுகூட நுட்பவிய லாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வைத்தியசாலைக்கு வார நாட்களில் சராசரி 35 நோயாளர்களும, சனிக்கிழமைகளில் 100 நீரிழிவு நோயாளர்களும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக வருகின்றனர்.

இந்த வைத்தியசாலை நோயாளர்கள் நன்மை கருதி, ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால், 30 லடசம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்தின் மேறபகுதிக்கு ஆய்வுகூடம் மாற்றப்பட்டுள்ளது. அத்துடன், இந்த ஆய்வுகூடம் நவீனமயமாக்கப்படவுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.மயிலேறுபெருமாள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 20 வருடங்களாக இவ்வைத்தியசாலைக்கு ஆய்வுகூட நுட்பவியலாளர் நியமிக்கப்படவில்லை எனவும், இப்போது ஒருவரை நியமித்ததையடுத்து, ஆய்வுகூடத்தை நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (17)

# ஈவினையில் கொலை முயற்சி; சந்தேகநபர்கள் இருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

ஈவினையில் வைத்து அருணாசலம் முத்தையா என்பவரை வெட்டிக் கொலைசெய்ய முற்பட்டதாக, இரு சந்தேக நபர்களைச் சுன்னாகம் பொலிஸார் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவரும், பிரதேசசபை பாதுகாவலர் ஒருவரும் அடங்குவதாகத் தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை, எதிர்வரும் ஜுன் மாதம் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதிமன்ற நீதிவான் சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

நித்திரையில் இருந்த முத்தையா என்பவரை, இரவு 1.30 மணியளவில் மூன்று இளைஞர்கள் வயிற்றிலும், கழுத்து, கை போன்ற இடங்களிலும் வெட்டிக் கொலைசெய்ய முற்பட்டனர். காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முத்தையா, அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

இவர், கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டியதுடன், கொலைசெய்ய வந்தவர்களின் தடயப்பொருளான மிளகாய்த்தூள் போத்தலை ஆதாரமாக வைத்து இரு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இது தொடர்பாக, சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

# பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்ய ஏற்பாடு!

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உள்ள கட்டடப் புனரமைப்புக்கள், கட்டடப் பற்றாக்குறை மற்றும் கணினி வசதியற்ற பாடசாலைகளுக்குக் கணினி வசதிகளையும், தளபாட வசதிகளையும், பாண்ட் வாத்தியக் கருவிகள் மற்றும் பாடசாலை விளையாட்டு உபகரணங்களையும் - விசேட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்க இந்து கலாசார அமைச்சர் ஏற்பாடு செய்துள்ளார்.

அத்துடன், பாடசாலைகளுக்கான விஞ்ஞான ஆய்வுகூடம், நூலக வசதி மற்றும் பாடசாலை மாணவர்களது விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையிலான விளையாட்டு மைதான அபிவிருத்திகளையும் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறான உதவிகள் தேவைப்படும் பாடசாலை அதிபர்கள், தங்களது பாடசாலைகளின் சேதவிபரங்கள் மற்றும் தேவைகளினதும், குறைபாடுகளினதும் விபரமான அறிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதிககு முன்னர் கச்சேரியிலுள்ள இந்து சமய விவகார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை ஆணைக்குழுவுக்கு

# முறையீட்டாளர் வராமையால் விசாரணை நடக்கவில்லை!

மாதகல் கடற்பரப்பில் மீனவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு செய்தவர், விசாரணைக்குச் சமுகமளிக்காததால், விசாரணைகள் நேற்றுமுன்தினம் நடைபெறவில்லை.

கடந்த 11 ஆம் திகதி மாதகல் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காகச் சென்றபோது, கடற்படையினரால் மீனவர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, தாக்குதலுக்குள்ளான மீனவர்களால் ஏற்கனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணையை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். மீனவர்களைத் தாக்கிய கடற்படையினா் விசாரணைக்குச் சமுகமளித்தபோதும், தாக்கப்பட்ட மீனவர்கள் சமுகமளிக்காமையினால் விசாரணைகள் நடைபெறவில்லை (ரா)



கொழும்புத்துறை - செபமாலை அன்னை ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கெபியைப் படத்தில் காணலாம். (படம்:எவ்.எக்ஸ்.சுதர்சன்)

# சின்னஞ் சிறு செய்திகள்

## விடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில் 'அகதா கிறிஸ்ரி'யின் நாவலை அடிப்படையாகக் கொண்டு 'சிட்னி லுமெற்றின்' இயக்கத்தில் உருவான **Murder On The Orient Express** என்ற ஆங்கிலப் படம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. இந்தப் படம் தமிழ் உபதலைப்புக்களுடன் காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன் பெறலாம் எனப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

(உடுவில்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலக நலன்புரிக்கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம், இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறுமெனத் தலைவர் இ.தவராஜா அறிவித்துள்ளார். (101)

## ஆவணங்களுடன் சமுகமளிக்கவும

(யாழ்ப்பாணம்)

சங்ஸ்தா கேடயத்துக்கான 15 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டிக்குப் பதிவுசெய்த சகல பாடசாலைகளும் - தேவையான ஆவணங்களுடன் (பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை) நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு யாழ். வலய உதைபந்தாட்ட இணைப்பாளர் வீ.எஸ். மகேந்திரன் கேட்டுள்ளார். (சு)

## அதிபர் தெரிவு நேர்முகப் பரீட்சை

(உடுவில்)

அராலி சரஸ்வதி வித்தியசாலை, நவாலி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபரைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை, எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று பி.ப. 5 மணிக்கு 'ஆன்மீக பலமே ஆதாரம்' எனும் விடயம் தொடர்பாக வேலணை மத்திய கல்லூரி அதிபர் பொ.அருணகிரிநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.


## வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



### முதலாவது அகவையில்



பெயர் : ம.ரிஷான்
முகவரி : கமலாசினி பாடசாலை வீதி, மட்டுவில்.

### முதலாவது அகவையில்

பெயர் : தி. பானுராஜ்
முகவரி : 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.



### இரண்டாவது அகவையில்



பெயர் : ந.சானுகா
முகவரி : அண்ணா சிலையடி, கரணவாய்.

### மூன்றாவது அகவையில்

பெயர் : ஞா.டினோஜன்
முகவரி : பாரதிலேன், நாயன்மார்கட்டு.



### ஆறாவது அகவையில்



பெயர் : யோ.நிலோயினி
முகவரி : இல: 11, நெடுந்தீவு கிழக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைச்



--------------------
பெற்றார் ஒப்ப..

# வீட்டுக் கஷ்டத்தினால்



# வேலைக் கஷ்டம் பெரிதாயில்லை

யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியேற வரும்போது இங்கு முக்கியமாகப் புனரமைப்பு வேலைகள் வேண்டப்பட்ட ஒன்றாக இருந்தது. 1995, 1996 காலப்பகுதியில் தென்னிலங்கைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான போக்குவரத்து, கடல் மார்க்கமாகவே நடைபெற்றது. அப்போது ஓடுகள், சீற் என்பன கப்பல் மூலமாகக் கொண்டுவரும்போது நிறைய சேதங்கள் ஏற்பட்டதுடன், காலதாமதங்களும் ஏற்பட்டன. இதனால், யாழ்ப்பாணத்திலேயே இவ்வாறான ஒரு தொழிற்சாலையை உருவாக்கி, பல பெண்களுக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே இந்த கியூடெக் சீற் உற்பத்தித் தொழிற்சாலை ஆகும். அங்கு வேலை செய்யும் பல பெண்களைச் சந்தித்தபோது அவர்கள் உள்ளத்தைத் திறந்து வெளிப்படுத்தியவை....

**செல்வலிங்கம் - நிஷானி முழங்காவில்.**

நான் முழங்காவிலிலிருந்து வேலைக்காக 1997 ஆம் ஆண்டு இங்கு வந்து கிட்டத்தட்ட ஆறு வருஷமாக இங்கதான் வேலை செய்து வாரன். நான் வீட்டோட இருக்கேக்க சரியான கஷ்டம். ஆனால், நான் இபப இங்க வந்து வேலை செய்து கிடைக்கிற காசில எனக்கும் கொஞ்சம் சாப்பாட்டுக்கு காசு வைத்துக் கொண்டு, மற்றக் காசு முழுவதையும் வீட்டுக்குத்தான் அனுப்புவன். அவயள் கிடைக்கிற நிவாரணத்தோட, நான் அனுப்பிற காசையும் வைத்து ஒரளவு சீவித்து வருகிறார்கள்.



இங்க வேலைக்கு வந்த புதுசில் மண், கல்லரித்து, சீற்றுத் துடைச்சு வெளியால வேலை செய்து வந்தனான். இப்ப என்ர முயற்சியால தொழில் முன்னேறி, மெஷினில கலவை போட்டு சீற் அடிக்கிற அளவுக்கு முன்னேறி இருக்கிறன். வேலை சரியான கஷ்டம்தான். ஆனால், குடும்பக் கஷ்டத்தைப் போக்க நினைச்சால், இது ஒண்டும் பெரிய கஷ்டம் மாதிரித் தெரியேல்ல.

**S. மேரிஜெசிந்தா நெடுங்குளம்.**

நாங்கள் இடம் பெயர்ந்து வந்து பற்றிக்ஸ் றோட்டில் இருக்கிறம். நாங்கள் 5 பிள்ளைகள். அதில் 4 பெண் சகோதரிகள். நான்தான் மூத்த பொம்பிளப்பிள்ளை. வீட்டில கஷ்டம்தான். அந்தக் கஷ்டத்தாலதான் இங்க வேலைக்கு வந்தனான். நானும், அப்பாவும் உழைச்சுத்தான் வீட்டைப் பாக்கிறம். வேலை கஷ்டம்தான், என்ன செய்யிறது. வீட்டுக் கஷ்டத்தால வேலைக் கஷ்டம் எனக்குத் தெரியிறேல. இது எனக்கு மட்டுமல்ல, இங்க வேலை செய்யிற எல்லோருக்கும்தான். நான் வேலை செய்யிறதால வீட்டுக்கு நான் சுமையில்லாமல் இருக்கிறதா நினைக்கிறன்.



**மஞ்சுளாதேவி, குருநகர்.**

நான் 17 வயசில கல்யாணம் செய்தனான். 18 வயதில என்ர கணவன் இறந்திட்டார். அதுவும் சூடுபட்டுத்தான் இறந்தவர். எனக்கு ஒரு பிள்ளை இருக்குது. நான் உழைக்கிறதால என்ர பிள்ளை ஒரு கஷ்டமும் இல்லாமல் படிக்குது. பிள்ளையை நல்லாப் படிக்க வைக்க வேணும் எண்டது தான் என்ர விருப்பம். அ்டுத்தவர்களிடம் போய் அடிமையாக இருக்கக்கூடாது. நேர்மையாக உழைச்சு சாப்பிடவேணும். அதாலதான் கஷ்டமான வேலை எண்டாலும் இதைச் செய்துவாரன். எல்லாரும் கேப்பினம் - என்ன ஆம்பிள மாதிரி வேலை செய்யிறாய் எண்டு. நான் அப்ப நினைக்கிறது, என்ர கஷ்டத்தை அடைக்கிற வழியை நான் தானே பார்க்கவேணும் என்று.



**சாந்தி**

90 ஆம் ஆண்டு இந்தியாவுக்குப் போய் இப்பத்தான் இங்க வந்திருக்கிறன். இங்க எனக்கு உறவுகள் எண்டு யாருமேயில்லை. ஒரு வீட்டிலை அடைக்கலமாக இருக்கிறன். இங்க ஒருநாளைக்கு 175 ரூபா தருவினம். அதை வைச்சு சீவிச்சுக் கொண்டிருக்கிறன். என்ர குடும்பம், அம்மா, அப்பா, கணவன், பிள்ளைகள் எல்லோரும் இந்தியாவில இருக்கினம். நான் வெளிநாடு போக எண்டு வந்து, போகயேலாம இங்க இருக்கிறன்.



வேலை கஷ்டம்தான். 30 பேர்வரை வேலை செய்யிறம். நான் சல்லி அரிச்சுக் குடுப்பன். வண்டில்ல சல்லி ஏத்தித் தள்ளிக் கொண்டு போவன். இப்பிடிக் கஷ்டமான வேலைதான்.

**ராஜினி குருநகர்.**

மகன் வயிற்றில் 6 மாதம் இருக்கேக்க என்ர கணவர் இறந்திட்டார். எனக்கு ஒருவரின் உதவியும் இல்லை. எனக்குச் சகோதரங்கள் இருந்தும், ஒரு உதவியும் செய்யிறேல. அதால, நான் இங்க வந்து சல்லி அரிச்சுக் கஷ்டப்பட்டு வேலை செய்து வாரன். மனதில இருக்கிற பாரத்தைவிட, இங்க செய்யிற வேலை சுகமாக இருக்கிது. என்ர பிள்ளை சுகமான இருக்க வேணும் எண்டதுதான் என்ர விருப்பம்.



இங்க நாங்க கிட்டத்தட்ட 30 பேர்வரை வேலை செய்யிறம். பொம்பிளப் பிள்ளையள் கல்லரிப்பினம், சீற் கழுவிவினம், கலவை போடுவினம், மெஷினில போட்டு ஒரு பொம்பிளப்பிள்ளை சீற்கூட அடிப்பா. அந்தளவுக்கு எங்களைப்போல சளைக்காமல் வேலைசெய்வினம்.

**அலோசியஸ், யாழ்ப்பாணம்.**

96 ஆம் ஆண்டிலயிருந்து இங்க வேலைசெய்யிறன். அடிக்கிற சீற்றுகள் கச்சேரி மூலமாக வீட்டுத்திட்டங்களுக்குத் தான் குடுக்கிறம். முந்தி ஒருநாளைக்கு 80 சீற்தான் அடிச் சனாங்கள். இப்ப ஒரு நாளைக்கு 200 சீற் அடிக்கிற அளவுக்கு முன்னேறி இருக்கிறம். இந்த தொழிற்சாலை நிறையக் கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கும், பெண்களுக்கும் நிறைய வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகிறது. காலை 8 மணிக்கு வேலைக குவந்தால் மாலை 5.30 மணிக்குத் வேலை முடித்து திரும்ப வீட்டுக்குப்போவம். ஒவ்வொரு வருஷமும் உடுப்புத் தருவினம், வட்டியில்லாம கடன் தருவினம். பிறகு மாதச் சம்பளத்தில கழிப்பினம். அப்பிடியான சலுகைகளும் கிடைக்கிறது.



**சந்திப்பு**
**உஷா, கலானந்தி**

# தலைவி நீ தலை நிமிர்...!



தலைமையேற்று நடாத்தும் ஒருவருக்குப் பல்வேறுபட்ட விடயங்களிலும் தீர்மானமெடுக்கும் திறமை அவசியமாகும்.

ஒரு பிரச்சினை ஏற்படும்போது எப்படி அதற்குத் தீர்வுகாண்பதென வழிகண்டு, அதன்படி நடந்து, முடிவவெடுப்பது முக்கியமானதாகும். முன்னேற்றத்துக்கான ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்போது, உடனடியாக அதை எப்படிப் பயன்படுத்தி வெற்றியடைவது அல்லது பயனடைவது எனச் சிந்தித்து, ஒரு தீர்மானம் எடுத்துச் செயற்படுவது வெற்றிக்கு வழியமைக்கும்.

தலைமையேற்று நடத்துபவரே பலவற்றில் முடிவெடுப்பவராக இருப்பதனால், விரைவாகச் சிந்தித்து சிறந்த சரியான முடிவை உடனடியாக எடுக்கும் திறமை அவருக்கு இருக்கவேண்டும். எனவே, இந்தத் திறமையை நீ வளர்த்துக்கொள்.

இந்த முடிவெடுக்கும் விடயத்தில் நீ பல பிரச்சினைகளைச் சந்திப்பாய். பெரும்பாலான குடும்பங்களில் இந்தப்பிரச்சினை உண்டு.

உடனடியாக முடிவெடுத்துச் செயற்படவேண்டிய சந்தர்ப்பங்களில் முடிவெடுத்துச் செயற்பட்டாற்கூட அதைப் பொறுக்கமுடியாது, ஏதோ ஒரு சிறுகுறையையாவது கண்டு, அப்படி தீர்மானித்துச் செயற்பட்டதே பெருந்தவறு போலக் குறைகூறும் மனோபாவம் பெரும்பாலான ஆண்களிடம் காணப்படுகின்றது.

அதுமட்டுமல்ல பெண்கள் முடிவெடுத்துச் செயற்படுவது பண்பாடு அல்லவென்று கருதும்நிலையும் எம்மிடையேயுள்ளது.

நிறுவனங்கள், தொழிலகங்களில் தலைமையேற்று நடத்தும்போதும் மேலதிகாரிகளின் விருப்பு, வெறுப்பு, சுயநலம் போன்றவற்றால் - நாமெடுத்த முடிவு தவறானதென அவர்கள் குறைகூறக் காரணமாயமைவதனைக் காணலாம்.

உதாரணமாக - நீ ஸ்தாபனத்திற்கு நன்மை தருமெனக் கருதி எடுத்த முடிவு, உன் மேலதிகாரிக்கோ, அவருக்கு மிக வேண்டியவருக்கோ பாதிப்பை ஏற்படுத்துமாயிருந்தால், அவர் - நீ எடுத்தது மிகச்சரியான முடிவாயிருந்தாலும், அது மிகத்தவறான முடிவென நிரூபிக்க முனைவார்.

ஒன்றை நீ மனதிற் கொள்ளவேண்டும். நீ முடிவெடுக்க வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில், உன் குடும்பத்தினதோ அல்லது நிறுவனத்தினதோ நன்மைகருதி அதைச் செய்தேயாகவேண்டும். அது உன் கடமை. மற்றவர்கள் குறைகூறுவார்களேயென்பதற்காக அவசியமான சந்தர்ப்பத்தில் முடிவெடுக்காமல், வேறொருவர் வரும்வரை காத்திருப்பதோ அல்லது மேலதிகாரியால் திணிக்கப்படும் தவறான முடிவை நடைமுறைப்படுத்துவதோ தவறாகும்.

ஓரில்லத்தின் தலைவியாகச் செயற்படும்போது - பெண்ணுக்கென நாமே ஏற்படுத்தக் கொடுத்துள்ள குணவியல்புகள், கடமைகள் என்பன அவளைத் தலைவியாகச் செயற்படவிடாது - ஒரு வேலைக்காரியாகவும், ஜடமாகவும் மாற்றிவிடுகிறது.

ஆனால், நீ அப்படியிருந்தால் உனது குடும்பமும், குடும்பத்தினருமே பாதிக்கப்படுவதால் நீ குடும்பத்தின் தலைவியாக நடப்பது உன் முக்கிய கடமையென நினை. குடும்ப அங்கத்தினரும் - குடும்பத் தலைவிக்குமுரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்வது அவர்களுக்கே நன்மை பயக்கும் என்பதையும் அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# கவிதைச் சோலை

## தரிசனம்



சூரியனே உன்னைப்போல்
நானும் பிரகாசித்திருப்பேன்
உன்னைப்போல்
உலகமெல்லாம்
உலாவந்து
மனித முகங்களையும்
மனங்களையும்
இனங்கண்டு
உன்னைப்போல்
எல்லா முகங்களையும்
தரிசித்துவிட்டால்.....

- தமயந்தி

## தனிமை



கூரைப் பொட்டுக்களால்
தெரியும்
ஒருதுளி வானம்
சூரியக்கீற்று
வாசல் ஓரமாக வளரும்
பச்சைச் செடிகொடிகள்
பக்கத்தில்
புத்தகப் புதையல்கள்
இன்னும்
சொல்லப்படாத கதைகள்
பிரசுரிக்கப்படாத கவிதைகள்
இமைக்கு வெளியே
இமைக்குள் சிக்கிய
கண்களைப் போல்
எந்த விரலாலும்
தீண்டப்படாததாய்
தனிமை மட்டும்
என்னுள் சுழலும்.

சி.நளாயினி நீர்வையூரான்

# ஒரு பூவின் பயணம்

'திறந்த உதடுகளால்
தரமுடியாத தேனிசை
உரத்த சத்தத்தால்
உணரப்படா உண்மை
இதோ அவள்
விழிகளின் மௌனத்தால்



விளைகிறதே!
நயகராவின்
நீர்வீழ்ச்சி நிலையாய்
அவள் கார்குழல்
புல்லாங்குழல் இசையைக்கூட
புரட்டிவிடும் அவள்
இதழ் மூடிய சிரிப்பொலி'

## மலர்ந்தும் மலராத பாதி மலர்போல...

கவிஞர் மாணியூர் ரட்ணேஸின் வரிகளில் ஆரம்பிக்கின்ற இன்றையபொழுது-அரும்பொன்று மொட்டாகி மலர்கின்ற நேரம். வசந்தவாசலில் முதற்காலடி பதிக்கின்றாள் நம் சின்னத்தேவதை. அவளது வாலிபவயதின் ஆரம்பத்தில் இயற்கை அற்புத அழகை அள்ளித் தெளித்திருக்கிறது. ஒரு 'புதிய பெண்' பூமிக்குக் கிடைக்கிறாள். ஒரு சிறுமி பூப்படைகிறாள். நாளைய நாளில் காதலியாக, நண்பியாக, மனைவியாக, தாய்ாக இவ்வுலகினை அரவணைத்து மலர்விக்கப்போகின்ற இனிய பெண் அவள்,

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னரும் உந்துசக்தியாக, ஊக்கசக்தியாக ஒரு பெண்முகம் தங்கியுள்ளது. ஆக்க மட்டுமல்ல, அழிக்கவும் வல்ல மகாசக்தி பெண். அவள் உருக்கொள்ளும் இப்பருவம்தான் எத்துணை அழகானது. அவளது ஒற்றைப் பார்வை கிடைக்காதபோதில் தற்கொலை செய்தவர்கள் உண்டு. அவளது கடைக்கண் பார்வையில் விண்ணையும் சாடுவான் மகாகவி பாரதி. எப்போதாவது, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணின் பார்வையில் பட்டுக் கொண்டால்போதும் என்றும், தாம் பிறப்பெடுத்த நோக்கமே அதுவெனக் கருதி சந்திகளில் ஆயிரக்கணக்கான வாலிபர்களை நிற்க வைக்கும் வல்லமை வாய்த்திருக்கிறது பெண்ணுக்கு. இவ்வாறான இனிய பருவத்தின் தொடக்ககால நெருக்கடிகளைச் சற்றே பார்ப்போமா?

ஒரு சிறுமி பூப்படைகிறாள். இக்கால கட்டம் பிள்ளைகளின் வாழ்வின் உடல், உள நெருக்கடிக்களுக்குரிய ஒரு காலப்பகுதியாகும். வாலிபப் பருவத்தின் ஆரம்பம் அவர்களது உடல் அமைப்பில் பல மாறுதல்களை ஏற்படுத்கிறது. மிகத் தெளிவான, திடீர் வளர்ச்சிப் போக்கு அவர்களை நெருக்கடிக்கு ஆளாக்குகிறது. பாலியல் கல்வியின் அறிமுகமின்மையானது - அவர்களைத் தேவையற்ற பயங்களுக்கு ஆளாக்குகின்றது. எமது சமூகத்தின் ஒப்பீட்டு நோக்கும் தன்மை அவர்களிடையே தேவையற்ற எதிர்பார்ப்புகளை ஆக்குகின்றது.

தற்போது பாடசாலைச் சிறுமிகளை அவதானித்தால் - ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புகளில் பெரும்பாலானோர் பூப்படைதலைக் காணலாம். மனவெழுச்சிகளின் தன்மை, பரம்பரைக்காரணிகள், உள்ளெடுக்கும் உணவு, முதிர்ச்சி அல்லது வளர்ச்சி வேகம் அதிகரித்தல் போன்ற காரணிகள் பூப்படைதலைத் துரிதப்படுத்துவதாக அறியப்படுகின்றது. பிள்ளைப் பருவத்தின் உற்சாகமான கலகலப்பை, எவரோடும் இயல்பாகப் பழகுந் தன்மையை, ஆண்பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதை எல்லாம் குறைத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறாள் பெண். குழந்தைத்தனம் மாறாத அவளது குறும்புத்தனங்களைச் சமூகம் இனிச் சகிக்காது. அவளது நடத்தைகளில் பொறுப்புணர்வு அற்றுப்போவதாகக் குற்றஞ்சாட்டப் பலபேர் முனைவார்கள். "பெண் இப்படித்தான்



இருக்கவேண்டும்" என்ற மரபுப்பார்வைகளால் அவள் தினமும் துளைக்கப்படுகிறாள். சமூக மரபுகள் பற்றியோ, ஏன் தன் 'மலர்தல்' பற்றியோகூட அறியாத சிறுவயதில் பிள்ளைகள் "பெரிய பெண்" என்ற வரையறைக்குள் தள்ளப்பட்டு விடுகிறார்கள். ஏனைய சிறுமிகளிலிருந்து இவள் விலகிக் கொள்கிறாள் ஆனால், இளம் பெண்களுடன் இவர்கள் சேர்ந்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே நெருக்கமான உறவுகளை இரு சாராருடனும் வைத்துக்கொள்ள முடியாத 'இரண்டும் கெட்டானாக' அல்லல்படுகின்றனர். இச்சந்தர்பங்களில் தாய், தந்தையரோ, வயதில் மூத்த சகோதர சகோதரிகளோ - இப்பிள்ளைகளுக்கு மிக ஆதரவாக இருந்து அவர்களை வழிப்படுத்துவது நல்லது. வயதில் முதிர்ந்தோர் அவர்களுக்கு சமூக நடைமுறைகளை எடுத்துச் சொல்வதன்றி, அவர்களைக் குற்றம் சுமத்திக் கண்டிப்பது தவறாகும். இதனால் இப்பிள்ளைகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வதன்றி வேறேதும் நிகழப்போவதில்லை.

எமது சமூகத்தின் மூடத்தனமான ஒப்பீட்

## அத்தியாயம் 07

டுப் பண்பு அல்லது விமர்சனப் போக்கு பூப்படையும் பருவப் பிள்ளைகளை அறியாமலே தாக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு ஏழாம் ஆண்டு கற்கின்ற சிறுமி - அவ்வீட்டில் ஒரேயொரு பெண். அவ்வீட்டுக்கு வரும் அவளது பாட்டி - பக்கத்து வீட்டுப் பெண் பத்து வயதில் 'வயதுக்கு வந்த' சேதி சொல்லி "இந்த வீட்டில் எப்போது விஷேசம்?" என்ற கேள்வி விசிறிப் போவாள். அச்சிறுமியின் உறவினரில் ஒருவர் அவளது பூப்புனித விழாவைக் கொண்டாடுவது பற்றி விபரண விளக்கங்கள் வழங்குவார். இவையெல்லாம் பூப்பென்னும் விளக்கம் இன்றிய சிறுமியின் மனத்தில் கொந்தளிப்பினை ஆக்கவல்லது. அவர் அறிந்திராத "அப்புதிய விடயத்தை" அவர் எதிர்பார்க்கத் தொடங்குகிறாள். கூட்டாளிப் பெண்களின் பூப்படைதல் விழாக்களைப் பார்க்குந்தோறும் - அவளது எதிர்பார்ப்பும், பலவிதமான குழப்பமான கேள்விகளும் அவளுள் எழுகின்றன. ஆனால், அவள் கொண்டுள்ள கேள்விகளைப் பகிரங்கமாகக் கேட்டும் துணிச்சலும் அவளுக்கில்லை.

பெரியவர்கள் வக்கிரத்தனமாக, அறிவீனமாக வீசிப்போகும் கேள்வி - ஒரு பிஞ்சு மனதில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஒரு கணம் சிந்தியுங்கள். "விஷேசம்" பற்றி வினவுபவர்களில் எவராது அதுபற்றிய விளக்கத்தை அல்லது அக்காலகட்டத்தில் அவள் கொண்டிருக்கவேண்டிய ஆரோக்கியம் பற்றி, உள்ளெடுக்கவேண்டிய உணவுகள் பற்றிக் கதைப்பதுண்டா? அது உடலியல் முதிர்ச்சியின் ஒருபாகம் என்றும், தனியாளுக்குத் தனியாள் கால அளவில் மாறுபடலாம் என்று விபரங்களை வழங்குவதுண்டா? குழந்தைகளின் நிசப்தமான மனக்குளங்களில் இரக்க மற்றுக் கற்களை வீசும் கொடுமைகாரர்களில் நீங்களும் ஒருவரா? நாம் ஒவ்வொருவரும் எம்மை நாமே கேட்டுக்கெள்ள வேண்டிய கேள்விகள் இவை.

எமது சமூகத்தில் பூப்படைதல் விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடும் வழக்கம் அதிகரித்து வருகிறது. இத்தருணத்தில் சமூக, பொருளாதாரத் தகைமைகளைத் "தம் பட்டம்" அடிப்பதற்குரிய அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது என்ற திருப்தி பல பெற்றோரிடம் காணப்படுகிறது. பிள்ளைகள் - மற்றைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டுத்தம்மை வருத்துவார்களே என்று கடன் வாங்கி விழாக்கொண்டாடும் பெற்றோர்கள் உண்டு. எவருடைய பூப்புனித நீராட்டுவிழாவில் கலப்புக் காட்சிகள் (Mixing) அதிகமுள்ளன என்ற போட்டி மாணவர்களிடையே இருப்பதால், பிள்ளைகள் வற்புறுத்தித் தம் விழாவைச் சிறப்பாக நடத்துவதும் உண்டு. இரண்டு மூன்று நாட்களாகப் பூப்புனித நீராட்டக் கொண்டாட்டங்கள் வைப்போரும் உண்டு. இதனால் பெற்றோரிடமும், பெண்பிள்ளைகளிடமும் மட்டுமின்றி, சின்னஞ்சிறு பெண் பூப்படைதலுக்கான எதிர்பார்ப்பு புகைப்படக்காரர்கள் தொட்டுத் தொடங்கியுள்ளது எனலாம்.

இவ்வழக்கமானது பூப்படையுந் தருணந்தொட்டே மகள் - தந்தையின் பொருளாதார நெருக்கடிக்கு வழிகோலுவதைக் காட்டுகிறது. "இவ்விழாக்கள் தேவையா?" என்ற கேள்வியைவிட "மற்றவர்கள் இப்படிச் செய்கிறார்களா?" என்பதிலேயே எமது சமூக நடைமுறைகள் கட்டியெழுப்பப்படுகின்றன.

இவற்றைக் கருதும்போது, பூப்படைதல் யாழ்ப்பாண சமூகத்தினைப் பொறுத்தவரை ஒரு "சந்தைப்படுத்தலுக்கான களமாக" ஆகிவருகின்றது எனலாம். இங்கு பெண்ணை அலங்கரிப்போர், விழாக்களை ஒழுங்கமைப்போர், விடியோ புகைப்படத் தொழிலாளர்கள், அலங்காரப் பொருட்களை வடிவமைப்போர், அழகான இடங்களை வாடகைக்கு வழங்குபவர்கள் எனப் பல்வேறு மட்டத்தினரை இணைக்கும் வேலைவாய்ப்புத்தளமாக இந்நீராட்டு விழா



அமைகிறது. இது சமூக வழக்கமாக வந்துவிட்டதில் இவ்வாறு கோலாகலமாக விழாக்களைக் கொண்டாடும் தகைமையற்ற பெண்பிள்ளைகள் மிகுந்த மனத் தாக்கத்துக்கு ஆளாகிறார்கள்.

பூப்புனித நீராட்டுவிழாக்களில் ஒளிப்படக் காட்சிகள் மிகுந்த செல்வாக்கும் செலுத்துகின்றன. ஒரு நிகழ்வினைப் பதிவு செய்யும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட விடியோ, புகைப்படக் காட்சிகள் இன்று குறித்த நிகழ்வைவிட, பெண்ணைக் கவர்ச்சிகரமாக எடுத்துக்காட்டுதலிலேயே தம் கவனத்தைக்கொண்டுள்ளன. இதையே சமூகமும் வேண்டிநிற்கிறது. தென்னிந்தியத் திரைப்பட நடிகைகளின் சாயலில் அவர்களின் சில பாவனைகளோடு மகள் தோன்றும்போது, பெற்றவர்கள் அடையும் மனமகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மெல்லத் தலைசாய்த்துச் சிரிக்கும்போது, சின்னதாய் மலர்ந்து வெற்றுவெளியை உற்றுப்பார்க்கும்போது, பூக்களைத் விசிறிய நீரில் பலபேர் பார்க்கக் குளிக்கும்போது, பெற்றவர்கள் மகளை முத்தமிட்டே ஆக வேண்டியுள்ளபோது - சின்னமகள் அழகிய நடிகைகளுடன் அழகில் போட்டி போடுகிறாள். கண்களுக்குத் திருப்தி தருகிறாள். ஆனால், யாழ்ப்பாண மரபுச் சங்கிலிகள் யாவும் அறுத்துத் தெறிக்கப் போவதற்கான முன்னேற்பாடில்லையா இது? அல்லது நாகரிகப் பிரதி பண்ணுதலா? ஒவ்வொரு சிறுபெண்ணும் அமிழ்ந்தே வெளியேறவேண்டிய சமூக நீரோட்டமா இது? இது சமூகத்தின் முன்னேற்றமா? அல்லது காலத்தின் போக்கில் எம்முடன் இணைந்த பின்னடைவா? இக்கேள்விகளுக்கான பதில்களை உங்களிடம் தேடுங்கள். ஏனெனில், இக்கேள்விகள் பரந்த மண்ணில்தான் வரப்போகின்ற பல்லாயிரக்கணக்கான சின்னஞ்சிறுமிகள் நடக்கப்போகின்றார்கள். அவர்களுள் உங்கள் மகளும்..... தங்கையும்.......!

(பயணம் தொடரும்)

ச.சாரங்கா

## பூரி கறி



கோதுமை மா (அவியாதது) – 1/4 kg
தேங்காய் – பாதி
மரக்கறி எண்ணெய் – 1/2 l
உருளைக்கிழங்கு – 1/2 kg
வெங்காயம் – 50 g
உப்பு, கடுகு, பெரும்சீரகம், மிளகாய்த்தூள்,
கறிவேப்பிலை, பெரும் சீரகத்தூள் அளவாக.

### செய்முறை

பூரி செய்வதாயின் முதலில் மாவை அரிக்கவும். அதனுள் அளவாக உப்புச் சேர்த்துக்கொள்ளவும். பின் அதனுள் பிழிந்த தேங்காய்ப்பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு நன்றாகக் குழைக்கவும். பின் சிறிதளவு எண்ணெயும் சேர்த்துக் குழைத்து, அரை அல்லது ஒரு மணித்தியாலம் மூடிவைக்கவும். பின் **Board** இல் போட்டு உருட்டி வட்டமாகவோ அல்லது முக்கோணமாகவோ வெட்டிக் கொதி எண்ணெயில் பொட்டு பொன்னிறமாகப் பொரிந்ததும் எடுக்கவும். (எண்ணெயைக் கரண்டியால் பூரிமேல் ஊற்றினால் பொங்கி வரும்) கறி செய்வதற்கு – அவித்த உருளைக்கிழங்கை சுத்தம் செய்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டியபின், வெங்காயத்தைச் சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக வெட்டித் தாய்ச்சியினுள் சிறிதளவு எண்ணெய் விட்டு, கடுகினைப் பொரியப்போடவும். பின்னர், அதற்குள் வெங்காயத்தையும் இட்டுப் பெரிக்கவும். ஓரளவு பொரிந்ததும் கறிவேப்பிலையையும், வெட்டிய உருளைக்கிழங்கையும் சேர்த்துக் கிளறவும். பின் உப்புத்தூள் என்பவற்றைச் சேர்த்த பின், தேங்காய்ப் பாலையும் விட்டு நன்றாகத் தூள் மணம் போகும்வரை அவிந்ததும், இறக்கும்போது பெருஞ்சீரகத்தூளை இட்டு இறக்கிப் பூரியுடன் சேர்த்துப் பரிமாறலாம். இதனை காலை உணவாகவும் பரிமாறலாம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

*- திருக்குறள்.*

## நமது நோக்கு

# சாதகமான பதிலும் சமாதான நிலைப்பும்!

வட - கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைச் செயலாற்றலுடன் முன்னெடுப்பதற்காக - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தைப் பற்றி வலியுறுத்தியுள்ள விடுதலைப் புலிகள் -

- இது தொடர்பாக, அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான பதிலையும் எதிர்பார்த்திருப்பதாக அறிவித்துள்ளனர்.

வட - கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டுமானத்தற்கும், யுத்தத்தால் சிதைக்கப்பட்டிருக்கும் மக்களது இயல்புவாழ்வை மீண்டும் சுமுகநிலைக்கு உருவாக்கவும் - அதிகாரங்கள் கொண்ட அமைப்பின் தேவை பற்றி பல கட்டங்களிலும் எடுத்துக்கூறிவந்த விடுதலைப் புலிகள் -

'சிறான்' அமைப்பின் செயற்படாத்தன்மைக்குப் பின்பு - இனிமேல், உறுதியான சட்ட அங்கீகாரம் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பொன்றின் அவசியத்தில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்யமுடியாது என்ற நிலைக்கு வந்துள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களின் முதற் கட்டங்களில், மக்களது அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டபோது - தலைவர் பிரபாகரனால் ஏற்கனவே முன்மொழியப்பட்டிருந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி - விடுதலைப் புலிகள் பிரேரித்திருந்தனர்.

ஆனால் - அச்சமயத்தில், இவ்வாறான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதில் சட்டரீதியான, அரசியலமைப்பு ரீதியான சிக்கல்கள் இருப்பதாக அரசாங்கம் கூறியது. சமாதானப் பேச்சுக்களுக்கு இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பின் தேவை ஒரு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என்ற நிலையில் -

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் உடனடி மனிதாபிமானப் பணிகளுக்கான உபகுழுவை அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

அதன்படி - உருவாக்கப்பட்ட உபகுழுவைச் சரியான முறையில் செயற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான உதவிகளோ, பங்களிப்போ கிடைக்காத நிலையில் - 'சிறான்' அமைப்பினால் மக்களது இயல்பு வாழ்க்கைக்கு எதுவிதத்திலும் துணைசேர்க்க முடியாமற்போனது.

மக்களது சுமுகவாழ்வு உறுதிப்படுத்தப்படாத, புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத, வட - கிழக்கின் மீள்கட்டுமானம் பற்றிய ஆரம்ப நகர்வுகளே ஸ்தம்பித்துப்போயிருக்கின்ற - இக்கட்டான சூழ்நிலையில் - தொடர்ந்து வருகின்ற சமாதானப் பேச்சுக்களின் விளைவுகள் பற்றிய நம்பிக்கையீனமும், சலிப்பும் மக்களிடமிருந்தும், விடுதலைப் புலிகளிடமிருந்தும் எதிரொலிக்க ஆரம்பித்த கட்டத்திலேயே -

இனிமேலும், சமாதானத்தின் விளைவுகள் தமிழ் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் - அர்த்தமுள்ள, சகல அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் தொடர்பாக விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருக்கின்றனர். இது தொடர்பில் அரசாங்கத்தின் பதிலையும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

வெறுமனே - 'சிறான்' போன்ற அமைப்புக்கள் மூலமோ அல்லது அரசியலமைப்பின்படி இயங்கவல்ல அதிகாரபீடத்தின் மூலமோ அல்லது வேறு எத்தகைய குறைந்த வீச்சுக்கொண்ட கட்டமைப்புக்கள் மூலமோ- மக்களுக்கான உடனடி உதவிகளை, புனர்வாழ்வு-புனரமைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்பதை அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துக் கூறியிருக்கும் விடுதலைப் புலிகள் -

வட - கிழக்கு அபிவிருத்திக்கான வலுவான கட்டமைப்பின் தேவை பற்றிய நியாயமான கோரிக்கையை அரசின் முன் வைத்திருக்கின்றனர்.

இந்நிலையில் - ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் முன்னராக இப்படிப்பட்ட உறுதியான சகல அதிகாரங்களும் கொண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் மாத்திரமே -

சர்வதேச நிதியுதவி பற்றியதும், அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பானதுமான - நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொண்டு -

தேக்கநிலையிலிருக்கும் சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதற்கு - வலுமிகுந்த இடைக்கால நிர்வாகம் பற்றிய சாதகமான முடிவை காலதாமதமின்றி அறிவிக்கவேண்டும் என்பதே தமிழ்மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# ரோக்கியோ மாநாட்டில் பங்கேற்கும் நாடுகள் புலிகள் பங்கேற்பதை விரும்பவில்லையாம்!

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ச கூறுகிறார்

ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகள், அதில் புலிகள் பங்குபற்றுவதை விரும்பவில்லை என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச அங்கீகாரம் மற்றும் நிதி நலன் என்பனவற்றைக் கவனத்திற்கொண்டே விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வர்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகள், புலிகள் பங்கேற்பதை விரும்பவில்லை. புலிகள் இம்மாநாட்டில் பங்குபற்றினால், தாம் பங்குபற்றமாட்டோம் என இந்தியா ஏற்கனவே தெரிவித்துவிட்டது.

இந்தியாவைவிட விடுதலைப்புலிகள்தான் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்று கருதி, அரசாங்கம் செயற்படுவது மிகவும் தவறு. பிராந்தியரீதியில் முக்கியத்துவம் மிக்க நாடு, மற்றும் இலங்கைக்கு நிதி உதவிகளைச் செய்யும் நாடு என்ற வகையில் அரசாங்கம் இந்தியாவின் பங்குபற்றுதலை அவசியமானதாகக் கருதவேண்டும்.

இந்தியாவை முக்கிய நாடாகக் கருதாது ரோக்கியோ மாநாட்டில் புலிகளைப் பங்கேற்கச் செய்ய, அரசாங்கம் அவர்களுக்கு வழங்கும் 'கப்பம்' என்னவென்பதை நாட்டு மக்களுக்கு உடனடியான அறிவிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்களின் காணிப் பிரச்சனை; கல்முனையில் சந்திப்பு நடந்தது!

முஸ்லிம்களின் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் உபகுழுவின் மூன்றாவது வலயமட்டக் கூட்டம் நேற்று முன்தினம் காரைதீவில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேசசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், காணிப்பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன.

நிந்தவூர், காரைதீவு, கல்முனைப பிரதேச முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரநிதிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும், பிரதேச செயலாளர்கள் மற்றும் அம்பாறை கச்சேரி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பல நாடுகள் உதவி

வெள்ளம், மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகளைப் பல்வேறு நாடுகளும் வழங்கி வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, மாலைதீவு, இந்தியா ஜப்பான் போன்ற நாடுகள் பெருமளவில் உதவிகளை - பாதிககப்பட்டுள்ள மக்களுக்காக வழங்கி வருகின்றன.

ஜப்பானிய அரசாங்கம் ஒரு கோடி அறுபது இலட்சம் ரூபாவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உதவிகளை வழங்குவதற்காக அன்பளிப்புச் செய்திருக்கின்றது. மேலும் பெருமளவு உதவிகளை வழங்க ஜப்பான் தயாராக இருப்பதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

# இனவாத நிலைப்பாட்டிலிருந்து விலகி ஒரு இணக்கப்பாட்டிற்கு வாருங்கள்!

## இலங்கை எம்.பிக்களிடம் பெல்ஜியம் சபாநாயகர் கோரிக்கை

(பிரஷெல்ஸ்)

குறுகிய இனவாத நிலைப்பாடுகளிலிருந்து விலகி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முயற்சி செய்யுமாறு பெல்ஜியம் நாடாளுமன்ற சபாநாயகர் ஹர்மன் டிகுமறா - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெல்ஜியம் சமஷ்டி குறித்து ஆராயச்சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுடன் உரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் பெல்ஜியம் அரசாங்கம் வழங்கும். சமஷ்டி அமைப்புகளிலேயே பெல்ஜியம் சமஷ்டி அமைப்பு வித்தியாசமானது. இலங்கை இனப்பிரச்சினைக்குப் பெல்ஜியம் சமஷ்டி அமைப்பை முன்னுதாரணமாகக் கொண்டு தீர்வுகாணமுடியும் என்றும் பெல்ஜியம் சபாநாயகர் ஹர்மன் டிகுமறா மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆயுதங்கள், வெடிமருந்து கண்டியில் மீட்கப்பட்டது!

(கண்டி)

கண்டி உடுதும்பரவிலுள்ள குடிநர் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றில், நிலத்துக்குகீழ் புதைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும, வெடிமருந்துகளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, கடந்த செவ்வாய் அதிகாலை 3 மணிக்கு மேற்கொண்ட திடீர் சோதனையின்போது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இரு சினைப்பர் துப்பாக்கிகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கியின் ரவைகள் என்பன மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட கண்டி குற்றத்தடுப்புப்பிரிவுப் பொலிஸார், இருவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இருவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார். (01)

# ஆனையிறவுத் தாக்குதலில் 1308 படையினர் அங்கவீனம்!

## நாடாளுமன்றத்தில் தகவல்

ஆனையிறவு இராணுவமுகாமைக் கைப்பற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 155 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 228 பேர் காணாமற்போயுள்ளதுடன், 1308 படையினர் அங்கவீனர்களாக உள்ளனர் என நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏச்.எம்.அஸ்வர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் வாய்மூலம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே, அமைச்சர் அஸ்வர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

# வாக்காளர் பட்டியல் மீளாய்வு அடுத்த மாதம்

2003 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் மீளாய்வுப் பணிகள் ஜுன் 3 ஆம் திகதி முதல் ஜுன் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாக்காளர்கள் - தமது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். கிராம அலுவலரின் பணிமனைகளில் புதிய வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பங்களைக் கையளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# புதிய நியமனப் பத்திரங்களை கோருவதற்காக சட்டமூலம்!

## நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு ஏற்ற வகையில் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது.

வட - கிழக்கு பகுதிகளில் உள்ள மூன்று மாநகரசபைகள், ஆறு நகரசபைகள், 44 பிரதேசசபைகளுக்கும் ஜுன் மாதம் 25 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறவிருந்தன.

இந்த உள்ளூராட்சி சபைகளுக்குப் புதிதாக வேட்புமனுக்களைக் கோர நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்திருந்தது. இதன்படியே உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ளார்.

இந்தச் சட்டமூலத்தின்படி புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்குத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திரைப்படத் தயாரிப்பாளர்களது கடனை அடைக்க லண்டன் வாழ் தமிழர்கள்தான் அகப்பட்டார்களா?

(நேற்றைய தொடர்ச்சி...)

அப்படித் தயாரித்தால்தான் படம் திரையரங்குகளில் பிச்சுக்கொண்டு ஓடும் என்று இயக்குநர், தயாரிப்பாளர்கள் (தப்புக்) கணக்குப் போடுகிறார்கள்.

சினிமா மோகம் என்பது தமிழ் நாட்டுத் தமிழர்களது ஏகபோக உரிமையல்ல. தமிழீழத்துத் தமிழர்களுக்கும் அந்த மோகம் இருக்கிறது.

ஒரேயொரு ஆறுதல்- சினிமா நடிகர், நடிகைகளுக்கு "ரசிகர் சங்கங்கள்" வைக்கும் அளவுக்கு அவர்கள் இன்னும் முன்னேறவில்லை. அந்தப் பித்தம் இன்னும் தலைக்கு ஏறவில்லை.



சிங்கப்பூர் விழாவொன்றில் விக்ரம், சரத்குமார்.

விஜயகாந்த்- கனடா வந்தபோது, பாமரத் தமிழர்கள் அவரைப் பார்க்க முண்டியடித்துக் கொண்டு போனார்கள். கூட்டத்தைக் கட்டுப் படுத்தக் காவற்துறை கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசவேண்டியிருந்தது.

கொழும்பில் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் இரண்டாவது உலக இந்து மாநாட்டை மே முதல்வாரம் தொடங்கி மிகத்தடல்புடலாக நடத்திமுடித்தார்.

அந்த மாநாட்டுப் படங்களைப் பத்திரிகைகளில் பார்த்த பக்தர்களுக்கு ஒரே "அதிர்ச்சி"

முன்வரிசையில் அருகருகாக தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் நடிகர் சரத்குமார், நடிகை ராதிகா இணையர் (தம்பதிகள்) உட்கார்ந்து இருந்தார்கள்.

பலதரம் மணம்செய்த இந்த இருவரையும் இந்து மாநாட்டுக்கு அழைத்த மாண்புமிகு அமைச்சர் - இந்து சமயத்தவர்களுக்குக் குறிப்பாக இந்து இளைஞர், யுவதிகளுக்கு என்ன செய்தியைச் சொல்ல விரும்பினார்?

ஒரு இந்துப் பெண் எத்தனை தரம் கணவர்மார்களை மாற்றிக் கொண்டாலும், அவள் "பத்தினி" தான் என்ற செய்தியையா அமைச்சர் இந்துக்களுக்குத் தெரிவிக்க விரும்பினார்?

பஞ்சபாண்டவர்களை மணந்து "ஐவருக்கும் பத்தினி - அழியாத பத்தினி" என்று பெயர் எடுத்த திரௌபதியின் சாதனையை ராதிகா மிஞ்ச, எஞ்சியிருப்பது மேலும் ஒரு கணவர்தான். நடிகர் சரத்குமார் அவரது நாலாவது கணவர்.

ராதிகா எத்தனை தரம் திருமணம் செய்து கொள்கிறார், எத்தனை பேர்களைத் திருமணம் செய்து கொள்கிறார் என்பது பிரச்சினையல்ல. அது அவரது சொந்தவிடயம்.

ஆனால், இந்த சினிமா நடிகரையும், நடிகையையும் இந்து மாநாட்டுக்கு அழைத்து, முன்வரிசையில் சந்நியாசிகளுடனும், சாதுக்களுடனும் உட்காரவைத்து அழகு பார்த்தாரே அமைச்சர். அதைத்தான் பொறுத்துக் கொள்ளமுடியாது இருக்கிறது.

கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய மதங்கள் எங்கேயாவது சினிமா நடிகர், நடிகைகளை அழைத்து இப்படி முன்வரிசையில் உட்காரவைக்கின்றனவா?

அவுஸ்திரேலிய 'இன்பத்தமிழ் ஒலி' வானொலிக்கு நேர்காணல் கொடுத்த அமைச்சர் மகேஸ்வரன் - "சரத்குமார், ராதிகா இருவரும் எனது நீண்ட நாள் குடும்ப நண்பர்கள். எனது தனிப்பட்ட அழைப்பையேற்று மாநாட்டுக்கு வந்தார்கள்" என்று சமாதானம் வேறு சொல்லியிருக்கிறார்.

அப்படியென்றால், அமைச்சர் தெருத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாரா?

அவர்கள் அமைச்சரின் தனிப்பட்ட அழைப்பில் வந்திருக்கலாம். ஆனால், அதற்கான செலவு பொதுமக்களது வரிப்பணத்திலிருந்து அல்லவா செலவழிக்கப்பட்டுள்ளது.

சரி, அமைச்சரை இப்போதைக்கு இந்த மட்டில் விட்டுவிட்டு, நட்சத்திர இரவுக்கு வருவோம்.

கடந்த வாரம் சினிமா உலகில் கொடி கட்டிப் பறந்த ஜி.வி. என்று செல்லமாக அழைக்கப்பட்ட ஜி.வெங்கடேசுவரன் தனது வீட்டுக் காற்றாடியில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டார். இவர் இயக்குநர் மணிரத்தினத்தின் அண்ணா ஆவார். இவரின் தற்கொலைக்குக் கடன் தொல்லைதான் காரணமாம். அவர் கடைசியாக எடுத்த படங்கள் செமத்த அடிவாங்கியது. அதில் விஜயகாந்த் நடித்த "சொக்கத் தங்கம்", "தமிழன்" அடங்கும்.

ஆனால், கடனில் தத்தளித்த ஜி.விக்கு உதவிட எந்த நடிகரும் முன்வரவில்லை. அவர்களுக்கு ஜி.வி. கடனில் மாட்டுப்பட்டு அவதிப்பட்டது தெரியாமலிருக்க நியாயமில்லை. மாமல்லபுரத்தில் தனக்குச் சொந்தமாக இருந்த 85 ஏக்கர் காணியை விற்றுத் தருமாறு நடிகர் ஒருவரைத் தற்கொலை செய்வதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் ஜி.வி. கேட்டிருக்கிறார்.

ஜி.வியின் தற்கொலை பற்றி "குமுதம்" இதழ் (மே 17, 2003) பெயர் குறிப்பிடாத ஒரு தயாரிப்பாளர் சொல்லியிருப்பதை எழுதியுள்ளது.

"தயாரிப்பாளர்கள் தரப்பை ஜி.வியின் மரணம் உலுக்கியிருக்கிறது. முன்பு பல படங்கள் தயாரித்து, பிறகு அதிலிருந்து விலகி, வேறு தொழிலில் (தயாரிப்பாளர் ஆவதற்கு முன்னால் பார்த்து வந்த கட்டடத் தொழில்) ஈடுபட்டுவரும் ஒருவர் வருத்தத்துடன் நம்மிடம் பொங்கினார்".

"குமுதம்" இதழின் தமிங்கில உரைநடையைப் பொருட்படுத்தாது பொறுமையுடன் தொடர்ந்து படியுங்கள்.

"சினிமா ஒரு அற்புதமான விடயம். வியாபாரம், கலை இரண்டுமே கலந்த சுவாரஸ்யமான தொழில். ஹாலிவுட்ல பாருங்கள்- பெரிய,

பெரிய ஹீரோக்கள் எல்லாம்கூடக் கதை பிடிச்சிருந்தால் சின்னரோல்கூட செய்வாங்க. படமும் பிரமாதமாக பிஸினஸ் ஆகும். அவ்வளவு ஏன் , ஹிந்தி, தெலுங்கு எல்லாம் கூட டபிள் ஹீரோ, டிரிபிள் ஹீரோ சப்ஜெகட்ஸ் எத்தனை வருது. தமிழ் சினிமாவுக்கு இது சாபக்கேடான நேரமிது. இருக்கிறவரை காசை ரத்தம் வர்ற அளவு உறிஞ்சி எடுத்துப் போகிறதுதான் நடிகர், நடிகை, டைரக்டர்களோட குறிக்கோளாக மாறிவிடுகிறது. யாருக்கும் கலை ஆர்வம் இல்லை. நேற்று வந்தவனெல்லாம் ஏதோ பெரிய கடவுள்போல வசனம் பேசறான். கண்ராவி, சினிமாவைக் கேவலப் படுத்துறானுங்க. சனங்களுக்கும் மட்டமான படங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சு. இவனுங்க காட்டற வெற்றுப் பந்தாவுக்கு சைலண்டா வர்ற டி.வி சீரியல் எவ்வளவோ மேல்னு நினைச்சுட்டாங்க... யாரும் தியேட்டர் பக்கம் வர்றதில்லை. கமல், ரஜனி எல்லாம் எத்தனை மீடியம் பட் ஜெட் படங்களில நடிச்சிருக்காங்க. எல்லோரையும் வாழ வைச்சது ஸ்டார்கள் இருக்கிற மீடியம் பட்ஜெட் படங்கள்தான். அது வராத வரைக்கும் தமிழ் சினிமா உருப்படாது. கடன் சுமை யில் தத்தளிச்சு வீணாத்தான் போகும்." படபடத்தார் அந்த முன்னாள் தயாரிப்பாளர்.

ஹீரோக்கள் மசாலா கதை, பெரிய பட்ஜெட், படத்தோல்வி, கடன்சுமை என்பது ஒரு விஷ வட்டம்போல் தமிழ் சினிமாவைச் சுற்றியிருப்பது உண்மை. எசகுபிசகாகப் படமெடுத்துக் கடன் சுழலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் திரையுலகப் பிரமுகர்களைப் பட்டியலிட்டால் அந்த லிஸ்ட் மிகவும் பெரிதாக இருக்கிறது. பல நிறுவனங்கள் காணாமல் போய்விட்டன. இருக்கும் ஒருசில பெரிய நிறுவனங்களும் வெளிப்பார்வைக்குப் பகட்டாக இருந்தாலும், நிதி நிலைமையில் மோசமான கட்டத்தில்தான் இருக்கின்றன. கந்துவட்டிக்குப் பணம் வாங்கிப் படமெடுத்து, நஷ்டமாகி வீடு, வாசல், சொத்துக்களை இழந்து கீழானநிலைக்கு வந்துவிட்ட பலர், பைத்தியம் பிடித்ததுபோல கோடம்பாக்கத்தில் சுற்றிக் கொண்டிருப்பது வேதனையான நிஜம்."

"இருக்கிறவரை காசை ரத்தம் வர்ற அளவு உறிஞ்சி எடுத்துட்டுப் போயிடுறதுதான் நடிகர், நடிகை. டைரக்டர்களோட குறிக்கோளக இருக்கும்போது, தமிழீழ தமிழர்கள் ஏன் அவர்களுக்குப் பணம் கொடுக்கவேண்டும்.

நலிந்துபோன தமிழ்த் திரையுலகத் தயாரிப்பாளர்களைக் கோடி, கோடியாகக் கொழுத்த சம்பளம் வாங்கும் நடிகர் நடிகைகள்தான் காப்பாற்றவேண்டும். இதை நான் சொல்லவில்லை. திரையுலகில் இருப்பவர்களே சொல்கிறார்கள்.

" பொலிஸின் இந்த கைவிரிப்புத் தயாரிப்பாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திவிட, ஜி.வி. தற்கொலைக்குக் காரணம் இவர்கள்தான் என்று ஒரு பட்டியலையே பொலிஸிடம் கொடுகக்த் தயாரானார்கள். அப்போது தப்பு முழுக்க நம்பக்கம் வைத்துக் கொண்டு பொலிஸைக் குறை சொல்வது ஏன்? கந்து வட்டிக்காரர்கள் பக்கம் நம்மை தள்ளி விடுவது எது என்று பாருங்கள். நம்மை உறிஞ்சும் ஹீரோக்களின் சம்பளம்தானே? அதற்கு முடிவு செய்வோம் என்று சீனியர் தயாரிப்பாளர்கள் சிலர் அணைபோட, பிரச்சினை ஹீரோக்களின் சம்பளம் நோக்கி திசை திரும்பிவிட்டது.

ஒரு கோடி ரூபாய் சம்பளம் வாங்கும் ஹீரோவுக்கு இனி அறுபது லட்சம் சம்பளம் எனத் தீர்மானிக்கின்றோம். ரசிகர்களால் பெரிதும் ஆராதிக்கப்படும் ஹீரோயினுக்கும் கூட இனி பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் ஒரு பைசா தரப்போவதில்லை. கொமெடி நடிகர்கள் இப்போது ஒவ்வொரு படத்துக்கும் பதினைந்து, இருபது என லட்சங்களில் சம்பளம் பெற்று கொழிக்கிறார்கள். இனி அவர்களுக்கு அதிகபட்சம் நான்கு லட்சம் ரூபாய்தான்!"

*(ஜூனியர் விகடன் மே 21,2003)*

தயாரிப்பாளர்களது கடனை அடைக்கத்தான் இலண்டன், துபாய் நகரங்களில் நட்சத்திர இரவுகளை நடாத்தி "கோடி, கோடியாக

## கனடாவிலிருந்து நக்கீரன்

நிதி வசூலிக்க நாங்கள் பாடுபடுகிறோம்" என்பதை ஒளிவு மறைவின்றி நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த் ஒப்புக்கொள்கிறார்.

"தமிழ்ப்படத் தாயரிப்பாளர்கள் சங்கத்துக்குக் கோடி, கோடியாக நிதி வசூலிக்க நாங்கள் பாடுபடுகின்றோம். லண்டன், துபாய், நிகழ்ச்சிகளுக்காகத் தினம்தோறும் என்னோட சகாக்கள கால் ஒடிய நடனப் பயிற்சியெல்லாம் பண்ணிக்கிட்டு இருக்காங்க. ஆனா நீங்க என்னன்னா, சினிமாவோட அழிவுக்குக் காரணமே நாங்க தான்னு பேசிக்கிட்டு இருக்கீங்க. கண்காணிப்புக்குழு எதையோபோட்டு எங்க சம்பளத்தைப பத்தியெல்லாம் கண்டபடி பேசறீங்க..." என்று சொல்ல, அங்கிருந்த தயாரிப்பாளர்கள் மத்தியில் சலசலப்பு.



திரைவிழாவில் மற்றுமோர் காட்சி

*(ஜூனியர் விகடன்-மே 21,2003)*

எனவே, தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு உதவவேண்டியது அவர்களை உறிஞ்சும் நடிகர், நடிகைகள்தான். நிச்சயமாக இலண்டன் வாழ் தமிழீழத் தமிழர்கள் அல்ல.

இப்போதாவது நட்சத்திர இரவு நடத்தி கோடி கோடியாக தமிழ்நாட்டுத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு நிதி திரட்டிக் கொடுக்கத் துடிக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தங்கள் முடிவை மறுஆய்வு செய்யவேண்டும்.

பிரித்தானியாவாழ் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒருங்கிணைப்புக் குழு இந்த "நட்சத்திர இரவு" நிகழ்சியைப் புறக்கணிக்குமாறு அறிக்கை மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

அவர்களது வேண்டுகோளுக்குத் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், தமிழ் உணர்வாளர்கள் செவிசாய்க்க வேண்டும். நட்சத்திர இரவை முற்றாகப் புறக்கணிப்பது மூலம் உடனிருந்துகொல்லும் தமிழ்ப்பகைவர்களுக்கு வாழ்க்கையில் மறக்கமுடியாத பாடத்தை நாம் செம்மையாகப் படிப்பித்துக் கொடுக்கலாம்! ❋

# வயோதிபர்களை ஏற்றி வந்த வாகனம் படையினரால் திருப்பியனுப்பப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மூதாளர் விடுதியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு, கண்பரிசோதனைக்காக வயோதிபர்களை ஏற்றிவந்த வாகனத்தைப் படையினர் திருப்பியனுப்பினர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி - கனகபுரம் அன்புச் சோலை மூதாளர் விடுதியிலிருந்து கண் பரிசோதனைக்காக ஐந்து வயோதிபர்கள் வாகனம் மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர். இவர்கள் வந்த வாகனத்தை முகமாலைச் சோதனைச் சாவடியில் சோதனையிட்ட படையினர், இந்த வாகனத்துக்கு வரி மற்றும் காப்புறுதிப் பத்திரங்கள் இல்லை என்று திருப்பியனுப்பினர்.

கண் பரிசோதனைக்காக வந்த வயோதிபர்கள், வேறு தனியார் வாகனம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். மேற்படி வாகனம் முன்னர் பலமுறை வயோதிபர்களைச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் ஏற்றி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (சு)

# துப்பாக்கிச் சூட்டில் ராணுவ சிப்பாய் காயம்!

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு - கொண்டவெட்டுவான் இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் சகசிப்பாய்களுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்தபோதே பின்புறமாகத் துப்பாக்கிக்குண்டு துளைத்ததாக, காயமுற்ற இராணுவ சிப்பாய் வைத்தியசாலையில் அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

கே.எஸ்.பெரேரா என்ற காயமுற்ற மேற்படி சிப்பாய், மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.



அல்ஜீரியாவில் நிலநடுக்கத்தால் இடிந்தழிந்த கட்டடம் ஒன்றின் முன்னால் - காயமடைந்த தனது மகளைக் காவிச் செல்கிறார் தந்தையொருவர்.



ஈராக்கில் - பாக்தாத்திற்கு அருகே கண்டுபிடிக்கப்பட்ட பெருமளவு சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த மர்ம இடமொன்றில் - சடலங்கள் மேலதிக பரிசோதனைகளுக்காகப் பொதி செய்யப்படுகின்றன.

# அல்ஜீரியாவில் நிலநடுக்கம் 800 பேர் பலி, 4700 பேர் காயம்

அல்ஜீரியாவில் கடந்த இருபது வருடங்களில் ஏற்பட்ட நிலநடுக்கங்களில், பாரிய நிலநடுக்கம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில், 800 பேர் பலியாகினர். 4700 பேர் காயமுற்றனர். தலைநகர் அல்ஜீயர்ஸ் மற்றும் கிழக்கு நகரங்களில் இடிபாடுகளிடையே இருந்து தொடர்ந்து சடலங்கள் மீட்கப்படுவதால், இறந்தோர் தொகை மேலும் அதிகரிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

அல்ஜீயர்ஸ் வைத்தியசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டு, காயமுற்றவர்கள் வைத்தியசாலைகளுக்கு வெளியே வைத்தே சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். சடலங்களும் நீண்ட தூரத்துக்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. புதன் அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால், ஏராளமான கட்டடங்கள் ஒரு செக்கனில் இடிந்து வீழ்ந்ததாக, நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். நிலநடுக்கத்தின் அதிர்ச்சி மத்தியதரை நாடுகளிலும் உணரக்கூடியதாக இருந்தது. பிரான்ஸ் 100 மீட்புப்பணியாளர்களையும், மோப்ப நாய்களையும் அல்ஜீரியாவுக்கு அனுப்பியுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டபோது, ஹோட்டேல் ஒன்றின் மேல்மாடியிலிருந்து சிலர் கீழே அச்சம் காரணமாக குதித்து - அதனால், இறந்த சம்பங்களும் இடம்பெற்றுள்ளது.



1980இல் நடந்த நிலநடுக்கத்தில், மூவாயிரம் அல்ஜீரிய மக்கள் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

### கால்நடைகளுக்கும் வைரஸ் தொற்று

கனடாவில் கால்நடைகள் மத்தியில் - குறிப்பாக, இறைச்சி மாடுகளில் சி.ஜே.டி.எனும் வைரஸ் தொற்று நோய் முதன்முதலாக பரவ ஆரம்பித்துள்ளது. இதனால், பண்ணைகளில் வளர்க்கப்படும் மில்லியன் கணக்கான கால்நடைகள் அழிக்கப்பட்டு புதைக்கப்படவுள்ளன.

## ஈராக் இடைக்கால நிர்வாகம் ஐ.நா. சபை அங்கீகரிக்கும்!



ஈராக்கின் இடைக்கால நிர்வாகத்தை மேற்கொள்ள அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்கும் அனுமதி வழங்கும் பிரேரணைக்கு, ஐ.நா பாதுகாப்புச்சபை அனுமதி வழங்கவுள்ளது. பிரான்சும், ஜேர்மனியும், ரஷ்யாவும் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்தப் பிரேரணையின்படி அமெரிக்காவும், பிரிட்டனும் இடைக்கால நிர்வாகத்தில் கூடுதல் அதிகாரம் கொண்டிருக்கும். புதிய அரசு ஏற்படுத்தப்படும்வரை இந்நாட்டுப் படைகள் ஈராக்கில் தங்கிநிற்கும். ஒருவருடத்திற்குள் நிலைமை மீள்பரிசீலிக்கப்படும். புதிய அரசு அமைய உதவும் முகமாக, விசேட தூதுவர் ஒருவரை ஐ.நா நியமிக்கும். பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும். எனினும், ஆயுதத்தடை தொடரும். ரஷ்யாவும், பிரான்சும் சில தொழில் முயற்சி ஒப்பந்தங்களைச் செய்ய அனுமதிக்கப்படும்.

ஈராக்கின் எண்ணெய்யை விற்கும் பணத்தில், ஈராக் கட்டியெழுப்பப்படும். இந்நிலை, புதிய அரசு ஓரிரு வருடங்களில் உருவாகும்வரை தொடரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


### சிறு விளம்பரம்

**பல் கட்டுதல்**

பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் நல்ல முறையில், நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம். இல. - 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-948)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரஜனி, ரம்பா, சௌந்தர்யா

அருணாசலம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

CASTAWAY

(சி-882)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்

ஒரே தின வெளியீடு

இளைய தளபதி விஜய்,

மீராஜஸ்மின் நடித்த



புதிய கீதை

10.30, 2.30, 6.30

(சி-884)


## அல்-கொய்டா மீதான விசாரணைகள் ஆரம்பம்

பிரஸ்சல்ஸில் கடும் பாதுகாப்பின் மத்தியில், 23 அல் - கொய்டா சந்தேக நபர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பமாகின. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், பல கொலைகள், தாக்குதல்கள் தொடர்பாக தேடப்பட்டவர்களாவர். செப்ரெம்பர் 11 தாக்குதலின்பின், இது அல்-கொய்டா சந்தேக நபர்கள் மீது நடக்கும் மூன்றாவது விசாரணையாகும்.

வழக்கு நடைபெறும் நீதிமன்றத்தைச் சுற்றி, பலத்த பாதுகாப்பு உருவாக்கப்பட்டிருப்பதோடு - தடை முகாம்களும் போடப்பட்டுள்ளன.


TSSA Estd:1992

## கீதப் போட்டி

இலண்டனில் (பெரிய பிரித்தானியா) கடந்த 12 ஆண்டுகளாக இயங்கிவரும் TSSA எனப்படுகின்ற தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திற்கு அவர்களின் நிகழ்ச்சிகளின்போது ராகத்துடன் பாடக்கூடிய கீதம் தேவைப்படுகின்றது. 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் நாள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 12 விளையாட்டுப் பிரியர்களினால் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (JSSA - UK) என ஆரம்பிக்கப்பட்டு 12 தமிழ் பழைய மாணவர் சங்கங்களுடன் முதலாவது விளையாட்டு விழா நடத்தினார்கள். இன்று இலங்கை முழுவதையும் சேர்ந்த 50 பழைய மாணவர் சங்கங்களுடன் ஆண்டுதோறும் இரண்டு பெரிய விளையாட்டு விழாக்களை நடாத்தி வருகின்றார்கள். ஜனநாயக முறைப்படி ஆண்டுதோறும் தெரிவுசெய்யப்படும் நிருவாகம் விளையாட்டு விழாக்களைத் திறம்பட நடாத்துவதுடன் தங்களின் பாடசாலைகளின் விளையாட்டு முன்னேற்றத்திற்கும் உதவி வருகின்றார்கள்.

மேற்படி கருத்துக்கள் வெளிப்படத்தக்கதாகவும், சுலபமாகப் பாடக்கூடிய ராகத்துடன் கூடியதாகவும் கீதம் அமையவேண்டும். தெரிவு செய்யப்படும் பாடலை இயற்றுபவருக்கு ரூபா பத்தாயிரம் (10,000) பரிசளிக்கப்படும். தெரிவு செய்யப்படுபவர் பாடசாலை ஒன்றின் ஆசிரியராகவோ அல்லது மாணவனாகவோ இருக்கும் பட்சத்தில் மேலதிகமாக ரூபாய் 2,500 வழங்கப்படும்.

இறுதி முடிவு TSSA செயற்குழுவினால் எடுக்கப்பட்டு வெற்றிபெறுபவருக்கு அறிவிக்கப்படுவதுடன் பத்திரிகை மூலமும் வெளிப்படுத்தப்படும.

போட்டி முடிவு திகதி : ஜூலை 1 ஆம் திகதி 2003

தொடர்புகளுக்கு : அ.பஞ்சலிங்கம், கோப்பாய் வீதி, உரும்பிராய்.

(சி/950)

TSSA Estd:1992

## பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பு

TSSA எனப்படும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் இலண்டனில் கடந்த பன்னிரண்டு வருடங்களாக செயற்படுகின்றது. 1992 இல் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (JSSA-UK) என பன்னிரண்டு பழைய மாணவர் சங்கங்களுடன் தொடங்கி இன்று 50 பழைய மாணவர் சங்கங்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுத்துறையை சிறப்பானதாக்க அதிபர்களுடன் சேர்ந்து செயற்படவிரும்புகின்றனர். சங்கத்தின் இந்த ஆண்டின் தலைவரான திரு. எஸ்.ஸ்ரீரஞ்சன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும், இவ்வேளையில் அதிபர்கள் எல்லோரையும் சந்திக்கும் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதிபர்கள் அல்லது அவர்களின் உதவியாளர்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அ.பஞ்சலிலங்கம்.
(அமைப்பாளர்)

*இடம்:-* கொக்குவில் இந்துக் கல்லூரி.
*காலம்:-* 28.05.2003, புதன்கிழமை, பி.ப.4.00 மணி.

தொடர்புகளிற்கு:- தொ.பே.இல: 222 3754
லண்டன்: செயலாளர், 13 Arcus Road, Bromley, Kent BRI-4NN (UK)
Tel: 020 8698 2938

(சி/951)

வெளிநாடுகளில் வாழும் உங்கள்
அன்பு நெஞ்சங்களுடன்
உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணமே...

☆ உரையாட ☆ குறைந்த கட்டண
☆ துல்லியமான ஒலி ☆ துரித சேவை

சகல நாடுகளுக்குமான தொலைத்தொடர்பு சேவை!

INTERNET E-MAIL BROWSING CENTRE

இன்னும் பல சேவைகள்!

மேலும் விவரங்களுக்கு:

SRI MURUGAN
TELECOMMUNICATION - AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna
T.P. : 021 222 2670
Fax : 021 222 3214
E - mail del. smskr@eureka.lk

(சி-947)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பாதுகாப்பு வலயக் கெடுபிடி மீது கண்டனம்

மக்களின் மீள்குடியமர்வை மனிதாபிமானமாகப் பார்க்கவேண்டுமே தவிர, இராணுவநலன் நோக்கில் பார்ப்பது தவறு என - அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயம் தொடர்பான இந்திய இராணுவ அதிகாரி நம்பியாரின் அறிக்கைபற்றி அவர் மேலும் பதிலளிக்கையில்- மக்களின் குடியிருப்புக்களை, பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் ஆக்கிரமித்திருக்கும் இராணுவம், அங்கிருந்து வெளியேறுவது இராணுவச்சம நிலையைப் பாதிக்கும் என்றால், யுத்த நிறுத்த உடன்படிக்கை என்பதே அர்த்தமற்றதாகிவிடும் என்றும் கூறினார்.

# அரசியலமைப்புக்கு வெளியே...

விடுதலைப் புலிகள் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதையும் நீங்கள் அறிவீர்கள்.

குறிப்பாக, சமாதான முன்னெடுப்புக்களில் - முதன்மையானதும், அடிப்படையானதுமான விடயம், யுத்தத்தால் நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட மக்களினுடைய வாழ்வு நிலையைச் சீர்படுத்துவது. இராணுவ நெருக்குவாரங்களைத் தணித்து, எமது பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியேறி, ஒரு இயல்புநிலையை கொண்டுவருவதேயாகும். இந்த அடிப்படை நோக்கத்தில், அரசும் - புலிகளும் ஏற்கனவே இணக்கப்பாடு கண்டிருக்கின்றோம். அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான், இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையிலும், இயல்புநிலையை ஏற்படுத்துவது பற்றித் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில், சமாதான முன்னெடுப்புக்களில் - எமது மக்களைப் பங்காளிகளாக்கிக் கொண்டு, அவர்களின் ஆதரவினையும் ஒன்று திரட்டிக்கொண்டு முன்னெடுத்துச் செல்வதென்பது எமக்கு ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, இருதரப்பும் இணக்கப்பாடு கண்ட விடயங்களை - மக்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு, கால அவகாசத்தை வழங்கும நோக்குடன் பேச்சுவார்த்தையை நாம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம்.

### ஜப்பான் உதவித் திட்டம்

அடுத்த முக்கிய விடயமாக, ஜப்பானில் நடைபெறப்போகின்ற உதவி வழங்கும் மாநாடு சம்பந்தமாக, தற்போது முதன்மையாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளை கலந்து கொள்ளச் செய்வதற்கு பல வழிகளிலும் சர்வதேச சமூகம் ஆர்வத்துடன் முயற்சி எடுப்பதை நாங்கள் பாராட்டுகின்றோம். அதேவேளை, அந்த மாநாட்டுக்கு தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வதற்கு - அதற்கேற்ற அங்கீகாரமும், அதற்கான சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் அவசியமானதாகும்.

### அமைதியை முன்னெடுக்க தலைமை ஆர்வம்

இந்த நிலையில் - இன்று சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்[illegible]டாக - எமது மக்களின் அவசரமான, மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும் நோக்குடன் மிகக்குறுகிய கால அமைப்பாக, இரண்டு தரப்பின் பங்களிப்புடன் இதை நாங்கள் உருவாக்கி இருந்தோம்.

எனினும், இந்த அமைப்பு சரியாகச் செயற்படமுடியாத ஓர் சூழ்நிலை ஏற்பட்டது. பல தடவைகள் இந்தக் குழு கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுத்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. இதனால், இந்த அமைப்பும் மக்கள் மத்தியில் நம்பிக்கையிழந்து விட்டது.

அவசரத் தேவையை உணர்ந்து சர்வதேச சமூகம் இந்த அமைப்புக்கூடாக, பல உதவிகளைச் செய்ய முன்வந்தது. இதன் அடிப்படையிலேயே, ஒஸ்லோ நகரில் உதவி வழங்கும் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த மாநாட்டின் போது, பல நாடுகள் எமது அவசர மனிதாபிமானப் பணிகளுக்கு உதவி வழங்க முன்வந்தன. இருந்தாலும், இந்த உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதற்கு 'சிறான்' என்ற இந்த அமைப்பின் செயற்திறனற்றதும், செயற்பாடற்றதன்மையும் காரணமாக அமைந்தன.

### புதிய சிந்தனை வடிவமாக...

இந்த நிலையில் புதிய சிந்தனைகளை - புதிய வடிவங்களை மற்றும் புதிய ஏற்பாடுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியும், ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டியதுமான நிர்ப்பந்தம், தமிழ்மக்களின் சார்பாக எமக்கு ஏற்பட்டது. ஏனெனில்- பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையிலும், நீண்ட பல தசாப்தங்களாக யுத்தத்திற்கு முகம்கொடுத்து, தமது அடிப்படைக் கட்டமைப்புக்களை முற்றாக இழந்து, பாரிய வாழ்வியல்- மனிதாபிமான நெருக்கடிக்குட்பட்டிருக்கின்ற மக்கள் என்ற வகையிலும் எமது மக்களுக்கு - ஒரு நிவாரணமும், ஓர் தீர்வும் மிகமிக அவசியமானதாகும்.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் - எமது மக்களின் சார்பாக, புதிய நிலைப்பாடுகளையும், மாற்றங்களையும், நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களையும் எடுப்பதன் மூலம், ஸ்தம்பித்திருக்கும் இந்தச் சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே எமது தலைமையின் விருப்பமாக இருக்கின்றது. அந்த அடிப்படையிலேயே - எமது பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் நாங்கள் வெளிப்படுத்[illegible]ருத்தமானது என்று - எமது மக்கள் கருதுகின்றனர். அந்த அடிப்படையிலேயே - எமது தலைமை தற்போது இந்தப் பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் முன்வைத்திருக்கின்றது.

இது குறித்து அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எமது இப்பரிந்துரைகள் குறித்து, பிரதம மந்திரியிடமிருந்து - ஓர் ஆக்கபூர்வமான, தீர்மானகரமான, உறுதியான பதிலை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

நாம் சமர்ப்பித்த ஆலோசனைகள் தொடர்பாக, தீர்க்கமான முடிவை அரசு மேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையிலேயே - அடுத்த கட்டத்தைப் பற்றிய முடிவினை நாம் மேற்கொள்ளலாம். அரசின் பக்கம் தான் இதற்குத் தீர்வு இருக்கின்றது. அந்த அடிப்படையில், அரசின் முடிவினைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதிகாரக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக, எங்களின் நிலைப்பாட்டை அரசுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். அரசிற்கும், அனுசரணையாளரான நோர்வே தரப்புக்கும் மற்றும் ஜப்பானிய அரசுக்கும்- ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ள முடியாமைக்கான காரணங்களை, நெருக்கடிகளைத் தெளிவுபடுத்தியுள்ளோம். அவற்றைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு அரசின் கைகளிலேயே உள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் - சரியான முடிவுகளையும், உறுதிப்பாடுகளையும் எமக்கு வழங்குவதாக இருந்தால், ரோக்கியோ மாநாட்டில் நாம் கலந்து கொள்ளக்கூடிய சூழல் பொருத்தமானதாக அமையும் என்றுதான் நாம் கருதுகின்றோம்.

இந்தப் புதிய இடைக்கால நிர்வாகம் - தீர்மானங்களை நிச்சயமாக முடிவெடுக்கக்கூடியதும், அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடியதுமான அதிகாரங்களைக் கொண்டதாகவும், சமாதானப் பேச்சுக்களில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக கலந்து கொண்டுவரும் விடுதலைப் புலிகளின் பெரும்பான்மைப் பங்களிப்புடனும் உருவாக்கப்படவேண்டும்.

### இலங்கையின் அரசியலமைப்பு தமிழர் விரோதமானது

இலங்கை அரசியல் யாப்பைப் பொறுத்தவரையில், அது- தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒன்றாகும். தமிழ் மக்களுடைய பங்களிப்பும், இணக்கப்பாடும் இல்லாமல் உருவாக்கப்பட்டதுதான் இலங்கையின் இன்றைய அரசியலமைப்பு ஆகும். இந்த அரசியல[illegible] எதிர்பார்ப்பாகும்.

ஆகவே - இலங்கைத்தீவில் அமைதியும் சமாதானமும், சுமுக நிலையும் ஏற்படுத்தப்பட வேண்டுமாயிருந்தால் - தமிழ் மக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டார்களோ, தமிழ்மக்கள் மீது எப்படியான ஒடுக்குமுறையும், நெருக்கடியும் ஏற்படுத்தப்பட்டதோ அதற்குத் தீர்வுகாணும் வகையில் - ஏதோவொரு வழிமுறையைத் தேட வேண்டிய தேவையுள்ளது. இதை விடுத்து, தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்ட, தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கின்ற ஓர் அரசியலமைப்புக்கு உட்பட்டுத் தீர்வைத் தேடினால், நிச்சயமாகத் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை. எனவே, தமிழ் மக்களுக்கு ஓர் தீர்வு வேண்டுமாகவிருந்தால், ஓர் இடைக்கால ஏற்பாடாக- இந்த அரசியலமைப்புக்கு வெளியே நின்று, சிந்தித்து இருதரப்பினரின் இணக்கப்பாட்டுடன் அத்தீர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது யதார்த்தமானதும் அவசியமானதுமாகும்.

இலங்கையின் அரசியலமைப்பு முழுக்கமுழுக்க சிங்கள மொழி பேசுகின்ற பெரும்பான்மைப் பலம் கொண்ட நாடாளுமன்றத்தினால் தான் உருவாக்கப்பட்டது. இதற்குத் தமிழ் மக்களின் அங்கீகாரமோ, பிரதிநிதித்துவமோ இருக்கவில்லை. இந்த அரசியலமைப்பு - தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கின்ற வகையிலும், தமிழ் மக்கள் இந்த அரசியலமைப்பை நிராகரித்ததன் அடிப்படையில்தான், இந்த விடுதலைப் போராட்டம் நீண்ட பல வருடங்களாக நடாத்தப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் - நிச்சயமாக இந்த அரசியலமைப்பினால், தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகள் மற்றும் அநீதியான நிலைப்பாடுகள் மாற்றமடையும் வரை, தமிழ் மக்கள் இந்த அரசியலமைப்பின் கீழ் தீர்வு எட்டப்படுவதற்கு இணங்கப்போவதில்லை. இது யதார்த்தபூர்வமானது. ஆகவே, இந்த நிலைப்பாட்டில் - அரசியலமைப்பிற்கு வெளியே சிந்திக்க வேண்டிய தேவை இருந்ததனால்தான், இந்தச் சமாதானச் சூழ்நிலையை இருதரப்பும் சர்வதேச அனுசரணையுடன் ஏற்கனவே ஏற்படுத்திக்கொண்டது.

அதன் விளைவாக யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த யுத்தமற்ற சூழ்நிலையில் - சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டது. இவையெல்லாம் அரசியலமைப்புக்கு வெளியே நின்றுதான் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, இந்த[illegible]

போது, நாங்கள் சரியான, உறுதிப்பாடான செய்தியைக் கொடுப்பது தான் பொருத்தமென நினைக்கின்றேன். இருதரப்பும் இணக்கப்பாடு கண்டு, இரண்டு தரப்பும் திருப்தியடைந்து, ஓர் இணக்கமான தீர்மானத்தின் அடிப்படையிலும், உண்மையின் அடிப்படையிலும், அரசு - புலிகள் ஆகிய இருதரப்பும் கலந்து கொள்வதிற்தான் சர்வதேச சமூகம் இங்கு முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொள்கின்ற சூழல் உருவாகும்.

விடுதலைப் புலிகள் இம்மாநாட்டில் பங்குபற்றுகின்ற சூழ்நிலை உருவாக்கப்படாவிட்டால், தமிழ் மக்களினுடைய இணக்கப்பாடு இன்றியும் - தமிழ் மக்களின் நலன்கள், தேவைகளைப் பூர்த்திசெய்யும் சூழ்நிலை ஏற்படுத்தப்படவில்லையென்ற கருத்தே, ரோக்கியோ மாநாட்டில் வெளிக்காட்டப்படும்.

தற்போதைய அமைதி முயற்சிகளில், மக்களின் நம்பிக்கையைக் கட்டிவளர்க்க வேண்டுமாயின், விடுதலைப் புலிகளை - சமாதான முயற்சிகளிலும், ரோக்கியோ மாநாட்டிலும் இணைத்து, பங்களிக்கச் செய்வது தான் பொருத்தமானதாக இருக்கும். அப்போதுதான் - சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்க்கலாம். இல்லாவிட்டால், சாதாரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் மாநாடு போலவே, ரோக்கியோ மாநாடும் அமைந்துவிடும்.

### வாக்குறுதிகள் நிறைவேறவில்லை

இதுவரை நடந்து முடிந்த ஒவ்வொரு கட்ட பேச்சுவார்த்தையின் போதும், இவ்வாறான இடைக்கால அதிகாரக் கட்டமைப்பு உட்பட, பல விடயங்களை வலியுறுத்தி, அவற்றுக்கான வாக்குறுதிகளைப் பெற்றிருக்கின்றோம். ஆனால், அவை நடைமுறைப்படுத்தப்படாமல், பின்னடிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போது சர்வதேச சமூகம் முழுஅளவிலும் பங்களிப்புச் செய்ய முன்வந்துள்ள சூழலில், நாங்கள் இவ்விடயம் தொடர்பான உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு தேவை உள்ளது.

### இது வரலாற்றுப் பணி

ஏனெனில் - கடந்த காலங்களில், உடனடி மனிதாபிமானப் பணிகளுக்கான உபகுழு செயலற்றுப் போன விடயம் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், மக்களை மீளக்குடியமர அனுமதி மறுத்து வருகின்றமை போன்ற பல விடயங்களை, ஒவ்வொரு கட்டத்தி[illegible]

## அமைதியை முன்னெடுக்க தலைமை ஆர்வம்

இந்த நிலையில் - இன்று சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள முடக்கநிலையும், நம்பிக்கையீனங்களும் அகற்றப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்ற எமது மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில், இந்தச் சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு, எமது தலைமை மிகுந்த ஆர்வத்தோடு இருக்கின்றது. அந்த அடிப்படையிலேயே - ஜப்பானின் விசேட தூதுவரையும், நோர்வேயின் வெளியுறவுத்துறை அமைச்சரையும் எமது தேசியத் தலைவர் சந்தித்து - அண்மைக்காலத்தைய சமாதான முயற்சிகளின் முடக்கநிலைக்கு காரணமான பக்கங்களையும், எதிர்காலத்தில் நாங்கள் இதை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஆற்றக்கூடிய பங்குகள் மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமாக எமது தரப்பு ஆலோசனைகளையும பரிந்துரைகளையும் அவர்களுக்கு விளக்கி கூறியிருந்தார்.

## சிறானின் தோற்றம் தோல்வி

முக்கியமாக இராணுவ நெருக்குவாரங்களைத் தவிர்த்து, மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதித்து, ஓர் இயல்புநிலையைக் கொண்டு வருவதற்கும், உடனடியான அவசர மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், பேச்சுவார்த்தையின் ஆரம்பப்பகுதியில் ஒரு உபகுழுவை உருவாக்கியதையும், நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த அமைப்பு உண்மையில் என்ன நோக்கத்திற்கு உருவாக்கப்பட்டது என்றால், மிகக் குறுகியகால ஏற்பா

செல்ல வேண்டும் என்பதே எமது தலைமையின் விருப்பமாக இருக்கின்றது. அந்த அடிப்படையிலேயே - எமது பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் நாங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

## சர்வதேச ஆதரவு தேவை

சர்வதேச சமூகம் இன்று, இரண்டு தரப்புக்களினதும் இணக்கப்பாடு மற்றும் உறுதிப்பாடுகளின் அடிப்படையில், இரு தரப்பும் இணைந்து இந்தச் சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் - மிகுந்த ஆர்வமும், அக்கறையும் கொண்டிருப்பதைப் பார்த்து நாங்கள் பாராட்டுகின்றோம்.

அதேவேளை, நடைமுறைச் சாத்தியமான எமது புதிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், சர்வதேச சமூகம் உறுதுணைபுரிய முன்வரவேண்டுமென்பதுதான், இன்று எங்களுடைய எதிர்பார்ப்பு.

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

ஜப்பானில் நடைபெறப்போகின்ற பாரிய பொருளாதார உதவி வழங்கும் மாநாட்டின்போது, யுத்தத்தால் அழிந்து போயிருக்கின்ற இந்த வட - கிழக்கு பிரதேசத்தை மீளக்கட்டியமைப்பதற்கும், எமது மக்களின் வாழ்வு நிலையைச் சீர்படுத்துவதற்கும் சர்வதேச சமூகம் செய்கின்ற அந்த உதவிகள், சரியான முறையில் எமது மக்களைச் சென்றடையக்கூடிய வகையிலான - அதிகாரமுள்ள, அதாவது - முடிவெடுத்தலிலும், நடைமுறைப்படுத்தலிலும் அதிகாரங்களையுடைய ஓர் இடைக்கால ஏற்பாடாக, இடைக்கால நிர்வாகத்தினை ஏற்படுத்துவதே சாலப்பொ

ளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒன்றாகும். தமிழ் மக்களுடைய பங்களிப்பும், இணக்கப்பாடும் இல்லாமல் உருவாக்கப்பட்டதுதான் இலங்கையின் இன்றைய அரசியலமைப்பு ஆகும். இந்த அரசியலமைப்பு, தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்புக்களின் காரணமாக, தமிழ்மக்கள் மத்தியில் விரக்தியும், வெறுப்பும் தோன்றியது. இதன் காரணமாகவே, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வளர்ச்சியடைந்ததை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, தமிழ் மக்கள் இந்த அரசியலமைப்புக்கு உட்பட்டு, ஆக்கபூர்வமான எந்தத் தீர்வையும் எதிர்பார்க்கமாட்டார்கள். சாத்தியமான இணக்கப்பாடு, உருவாக்கப்பட வேண்டுமானால் அரசியலமைப்புக்கு வெளியே உருவாக்குவதுதான் சாத்தியமானது. எனவே, இவ்வாறான நெருக்கடிகளைப் புரிந்துகொண்டு, எமது மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில், சர்வதேச சமூகமும் சிந்திக்கக்கூடிய காலம் இன்னமும் கடந்துவிடவில்லை.

இன்றைய நிலையில் எம்மைப் பொறுத்தவரையில், யுத்தமொன்றின் மூலம் தீர்வை எட்டுவதைவிட சமாதான வழியிலும், அமைதி வழியிலும், நாகரிகமான முறையிலும் நாங்கள் பேச்சுவார்த்தை நடாத்தி, இரு தரப்பினதும் இணக்கப்பாட்டுடன் ஓர் தீர்வை எட்டுவதைத்தான், தொடர்ந்தும் எமது தலைமை எதிர்பார்த்திருக்கின்றது. அப்படியான ஓர் நிலைமையைத் தோற்றுவிப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யாமல், உறுதியான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டுமென்பதுதான் இன்றைய எமது

உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த யுத்தமற்ற சூழ்நிலையில் - சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டது. இவையெல்லாம் அரசியலமைப்புக்கு வெளியே நின்றுதான் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, இந்த யதார்த்தத்தின் அடிப்படையில் - சாத்தியமான தீர்வுக்கான வழியைத் தேடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். இது தவிர்க்க முடியாத ஒன்று.

தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதனாலும், அவர்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம் காரணமாகவும், தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து பல இலட்சம் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். உண்மையிலேயே வட - கிழக்கு தாயகப் பிரதேசத்தில் வாழ்ந்த பல இலட்சம் மக்கள் இன்று அங்கில்லை. இங்கு அரசியல் ஸ்திரத்தன்மையும், உறுதிப்பாடும் ஏற்படுத்தப்பட்டு, சுமுகமானநிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

ஜப்பானில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் மாநாட்டின்

களுக்கான உபகுழு செயலற்றுப் போன விடயம் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், மக்களை மீளக்குடியமர அனுமதி மறுத்து வருகின்றமை போன்ற பல விடயங்களை, ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் பேசியிருக்கின்றோம். அவர்கள் உறுதிமொழிகள் பலவற்றைத் தந்திருக்கிறார்கள். ஆனால், அவை நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், தற்போது ஓர் முக்கியமான கட்டத்தில், எமது மக்களின் நலன்சார்பான விடயங்களில் சில உத்தரவாதங்களைப் பெறவேண்டியுள்ளது. இது ஓர் வரலாற்றுப் பணியாகும் என்றார்.

(க,ரா)

## சட்டமா...

சட்டமா அதிபரிடம் இவ் ஆலோசனைகளைப் பெற்றுவருகிறார். இவ்வாறான அதிகாரம் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும்போது, அரசியல் அமைப்புத் தொடர்பான சட்டச்சிக்கல்கள் தோன்றுமா என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.90 | 97.37 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.99 | 159.47 |
| 1 யூரோ | 112.32 | 113.71 |
| 1 சுவிஸ் பிராங் | 74.14 | 75.45 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.89 | 64.07 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.93 | 25.93 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.